1288

ஜகன்மோகினி

JAGANMOHINI

1—2—58

25 நயா பைசா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 DEC 1958
MADRAS

1288
4.58

JL
N58.352
18321

ஜகன்மோகினி

ஜயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி

பிப்ரவரி 1958. மலர் 35, இதழ் 2. ஏவிளம்பி ௵ தை மீ

அறுபத்தி மூன்றாவது கௌஹாத்தி மஹாநாடு
—V. K. பார்த்தசாரதி ஐயங்கார் ... 1

என்னைக் கவர்ந்த காந்தி
—K. பாஷ்யம் M.L.C. [Ex. Minister] ... 6

கண் திறந்தது
—அருளாளன் 9

அன்பும் அமளியும்
—T. S. ராஜகோபாலன் ... 16

கர்வ பங்கம்
—வை. மு. விஜயலக்ஷ்மி ... 21

பாரதப் பூங்கா
—வசுமதி ராமசுவாமி ... 25

சொல்லட்டுமா?
—ஹாஸ்ய நடிகர் L. நாராயணராவ் ... 28

கிழக்கு வெளுத்தது
—வை. மு. கோ. ... [21—40]

அறுபத்தி மூன்றாவது
கௌஹாத்தி காங்கிரஸ் மகாநாடு.

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி. ஏ. பி. எல்.

அறுபத்திமூன்றாவது காங்கிரஸ் மகாநாடு அஸ்ஸாமிலுள்ள பிராக்ஜோதிபூரில் கூடிமுடிந்தது. ஆவடி காங்கிரஸில் அறுபது காளைகள் பூட்டி நடந்த ஊர்வலம், பிராக்ஜோதிபூரில் அறுபத்தி மூன்று யானைகள் கட்டி நடந்தது. உழைப்புக்கும் உழவுக்கும் உள்ள சின்னமாகிய காளையைக் கைவிட்டு, மதமும் மிருக பலமும் மிகுந்த யானையைக் கொண்டதுவும் ஓர் குறிப்பே காட்டுகிறது போலும்

காங்கிரஸ் கட்சி ஊழலாகி வருவதை கௌஹாத்தி மகாநாட்டில் பேசிய தலைவர்முதல் இதரர் ஒவ்வொருவரும் எடுத்துக் காட்டியுள்ளனர். மகாநாடும், இதுவரை நடந்தது போன்ற விழாத் தோற்றமிராமல், உத்சாகமுமற்ற கூட்டமாகவே இருந்ததென, சென்றுவந்தோர் சொல்கின்றனர். மகாநாடும், திட்டமிட்டப்பட்டிருந்த காலத்திற்கு ஒருநாள் முன்னதாகவே முடிந்துவிட்டதாம். எல்லாம், மதப்பற்றற்றோர் செய்யும் வைதிகச் சடங்குபோல்தான் நடந்தேறியிருக்கவேண்டும்.

தலைமையுரையில் தேபார் சொல்லிய சில நன்மொழிகள், நன்கு வற்புறுத்தப்படாது, ஏதோ சந்தர்ப்பத்தில், கவனம் ஈர்க்கப்படாத வகையில் வெளிவந்துள்ளபோதிலும், உண்மை தேச பக்தர்கள் அவற்றினை எடுத்துக்காட்டி மக்கள் மனத்துள் பதியச் செய்யவேண்டியதவசியம். கொள்கைக்கும் செய்கைக்கும் இன்று இருந்துவரும் பேதத்தை இனியாவது ஒழித்தாலொழிய நம் நாடும், காங்கிரசும் நிலைநிற்பதியாதென்ற தோரணையில் அடிக்கடி எடுத்துக்காட்டிப் பேசியுள்ளார் பெரிதும்பழகிய இத்தலைவர். பிரசாரமொன்று, அனுஷ்டானம் வேறு என்பதையேதான் இதுவரை பல காங்கிரஸ் அதிகாரிகளும் தமது கொள்கையாகக் கொண்டு, காங்கிரஸ் கட்சியையும், சுதந்திர இந்தியாவையும் பல க்ஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக்கி வைத்துள்ளனர் என்பதை நன்கு சூசிப்பித்துள்ளார் ஸ்ரீ தேபார்.

காங்கிரஸ் மகாநாட்டில் ஆட்சிமொழி பற்றிய விவாதமும் தீர்மானமுமே தலைதூக்கி நின்றது. ராஜாஜியும் அண்ணாதுரையும் ஒரே மேடையில் ஒன்றுகூடி ஆங்கில அகற்றலை எதிர்த்துப் பேச காங்கிரஸ் ஆட்சி இடங்கொடுத்துவிட்டதே! இப்பாஷைப் பிரச்னையே வட இந்தியாவையும், தென் இந்தியாவையும் இன்று பிளவுபடுத்திப் பிரித்துவிட்டதே! ஆங்கிலம் மறப்பதற்கு கால வரை எதற்கு? ஆட்சிமொழி நிர்ணயம், குடிகளாக ஏகமனதுடன் நாளாவட்டத்தில் மனப் பண்பாடுடன் தாமாக ஏற்கவேண்டிய மொழியே யல்லவா? நம்மதேயான ஸமஸ்கிருதத்தை ஏற்றால் எவரும் எதிர்ப்பதற்கில்லையே?—அந்த பிரிவில், அங்கிய பாஷையொன்றை நம்மதென ஸ்வீகாரஞ்செய்துகொண்டு, நாம் நன்றாய்க்

கற்றுதீர்ந்த ஆங்கிலத்தை மறந்து அகற்றவேண்டுமென அதிகாரம் சுமத்தியதால்தானே, இவ்வளவு கிளர்ச்சிகளும், அனர்த்தங்களும்!—

சத்யாக்ரகம், உண்ணுவிரதம், வேலைநிறுத்தம் என்ற உன்னத சாதனங்களையெல்லாம், காந்தீஜீகையாண்டவகையைவிட்டு, சுயநலகாரணமாய்க் கையாண்டு இக்காலத்தியோர் கெடுக்கிறார்களேயென நேருஜீ வருந்துகிறார் வாஸ்தவம்தான்—. ஆனால், தப்பு யாருடையது?—முதலாளி தொழிலாளி பேதமெழுப்பிஎதற்கும் வேலை நிறுத்தம் போதித்தது காங்கிரஸ் தலைவர்கள் தாமே?- பள்ளிப் பிள்ளைகளையும் குடும்பப் பெண்களையும் அர்த்தமற்ற மறியல்களது முன்னணியில் நிறுத்திப் பழக்கிவைத்தது காங்கிரஸ் ஜனநாயகத் தலைவர்கள் தாமே!—. சம்பள உயர்வு வேண்டுமென கார்ப்பரேஷன் தோட்டிகளுக்கும், ரயில்வே சிப்பந்திகளுக்கும் தபாலாபீஸ் சிப்பந்திகளுக்கும் வேலை நிறுத்தஞ் செய்திட வழிகாட்டிப் போதித்து சாதித்துக் கொடுத்ததுவும் காங்கிரஸ் தலைவர்தாமே!—: தவிர வேண்டாச் சட்டங்கள் மாறவேண்டுமென உண்ணுவிரதங்கள் கிடந்து கலவரமெழுப்பியதும் காங்கிரஸ் கட்சியாளர்தாமே!—: பிராமணர்கள் ஒழியவேண்டுமென்பதற்கும் இப்பொழுது மறியலும் சாத்விகப் போராட்டமென்ற உள்நாட்டுக் கலகங்களும் மலிந்து வருவதும் ஜாதிபேதமொழிக்கும் காங்கிரஸ் கொள்கையைப் பூர்த்தி செய்விக்கத்தான் என்கிறார்களே பிராமணரைக் கொன்று ஒழிக்க முன்வந்துள்ளோர்.

காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவர் கூறுகிறார்:—நில விஷயமான சட்டங்களை எளிதாக்கிச் சீக்கிரத்தில் சீர்திருத்தியமைத்தால்தான், மக்கள் மனத்துள் ஓர் புத்துணர்ச்சி எழும்பி, விலைகொடுத்து வாங்கவொண்ணாததும், வெடி குண்டும் ஊடுருவிச் செல்ல வல்லாததும், அணு குண்டுகள் அழிக்கவொண்ணாததுமான அத்துணை அழுத்தமான நிரந்தர ராஜபக்தியை காங்கிரஸ் கட்சியார் எழுப்பக்கூடுமென்று கூட்டுறவும், பொருளாதார உணர்ச்சியுங் கொண்ட கிராம வாழ்க்கையே குறிக்கோளாக நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் ஏற்பட வேண்டுமென, மகாநாடு தீர்மானித்துள்ளது; ஆனால் மக்களுக்கு மனமாற்ற மேற்படும் வழி எங்கே? அதிகாரிகளிடமும் ஆளுங்கட்சியிலும், பணமும் பதவியும் சுயநலமும் தேடுவோர் போட்டியிட்டு ஓட்டுவாங்க, எழைஎளியோர்களை விலை கொடுத்தோ, பசப்பிப் பேசியோ, பயமுறுத்தியோர் கட்சி சேர்த்திட முனைந்துசெல்லும் இன்றைய சமூகத்தின் நிலைமையிலா அனுஷ்டானமற்ற இவ் வழகிய பேச்சுக்கள், பொதுநலக் காரியங்களாகக் மாறக்கூடும்!

திட்டக் கமிஷன் நியமித்த பொருளாதார நிபுணர்கள் திட்ட நிபுணர் தீர்மானம் பற்றியும், விலைவாசிக்கொள்கைபற்றியும் டில்லியில் மூன்று நாள் கூடிப்பேசி, 25-1-58-ல் ஓர் முடிவு கூறியுள்ளார்கள். இதன்படி, இன்றைய விலைவாசிகள் கடந்த காலத்திலோ, வருங்காலத்திலோ, கட்டுக்குள் அடக்கப்படக் கூடாத

தாக இல்லையாம். ஒத்திவைக்கக்கூடிய செலவுகளெல்லாம் இனிக் கைவிடப்பட வேண்டுமாம்; கட்டிட திட்டங்களில் அத்தியாவசிய உபயோகமானவைகளே எடுக்கப்பட வேண்டுமாம். குடிகளது ஒத்துழைப்புடன் இத்தகைய சேமிப்பு முறைகளால், 4800 கோடி ரூபாய் சேமிக்கக் கூடுமாம். 'அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா ஆவாள்' என்ற ஜோஸியம் கூற இவ்வளவு நிபுணர்கள் நிறைந்த கூட்டம் தமது அறிவை வீணுக்க வேண்டுமா? தேபார் தமது தலைமை உரையில், இம்மாதிரி கமிஷன்களும், கமிட்டிகளும், அவர்கள் சிக்கவிழ்க்க வேண்டிக் கொடுபட்ட பிரச்சினைகளை சிக்கவிழ்க்காது போவதுடன், அவைகளையே மேலும் சிக்கல் கொண்டதாக்கி, தமது அறிக்கைகள் மூலமாய், பல்வேறு புதுப் புது சிக்கல் பிரச்சினைகளை விளைவிப்பதோடு, ஓர்வழியாக முடிவடைந்து முடங்கிய பிரச்னைகளையும் திரும்பக் கிளர்த்திச் சிக்கலாக்கி விடுகின்றனர் என்று ஓர்ந்தோ, மறந்தோ வருவது மிக மிக உண்மையே!

பிற நாட்டார் கடன் கொடாவிட்டாலும் நாமே முனைந்து ஐந்தாண்டு திட்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமாம். எப்படி? பொதுமக்கள் உணவு உண்பதை மறந்து, உடுப்பதைக் குறைத்து, இடவசதிகளை நெருக்கடி யாக்கிக்கொண்டு, அரசாங்க அதிகாரிகளும், நிபுணர்களும் தினத்திற் கொருவராக நினைத்தபடி மாற்றி மாற்றி இட்டுவரும் சட்ட திட்டங்களுக்கு அடிமைகள் போல அடங்கியிருந்துதான்!... இதெல்லாமா நேர் வழி?— அன்பும் ஒத்துழைப்பும் வளர்க்கும் முறை?

இவ்வருட காங்கிரசில் முக்யமாக நான்கு விஷயங்களைப் பற்றிய தீர்மானங்கள் சரசர வென்று நிறை வேறின. முதல் தீர்மானப்படி, ஆங்கில ஹிந்தி ஆட்சிமொழிப் போரை அடக்க' 1965-வது வருஷப் பின்னரும் ஆங்கிலம் இருந்து வரலாமென ஆங்கிலத்துக்கு அபயமளிக்கப் பட்டுள்ளது. ஹிந்தி, ஆட்சிமொழிக்குத் தன்னை உரித்தாக்கிக் கொள்ள ஏற்பாடுகள் நடந்தேற வேண்டுமென்னவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த மத்தியஸ்தத்தின் விளைவாக, தென் இந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் புதுப் பகையும் எதிர்ப்பும் இப்பொழுதே தலைதூக்கி விட்டதை முன்னரே விளக்கியுள்ளோம். இதுதான் ஆட்சி பாஷைபற்றிய இந்த காங்கிரஸ் மத்யஸ்த தீர்மான விளைவு.

இரண்டாவதாக, முன்னமே விவரித்தபடி, நில சம்பந்தப்பட்ட சீர்திருத்தங்கள் சீக்கிரமே வரவேண்டுமாம். நிலச் சொந்தக்காரர்களுக்கும், பயிரிடுவோர்க்கும் பரஸ்பர அன்பும் ஒத்துழைப்பு மில்லாது எலியும் பூனையும் போன்ற உறவை சட்டமூலமாக வளர்த்துப் போனால் நிலம் எப்படிப் பயிராகும்? 4800 கோடி சேமிப்பு எங்கிருந்து வரும்? ராஜ பக்தியும் தேச பக்தியும் எப்படி உண்டாகும்? அதை கவனிக்கவில்லை தீர்மானம் நிறைவேற்றியோர்.

மூன்றாவதாகப் பொருளாதார நிலைமைப் பற்றிய தீர்மானம் மேலே குறிப்பிட்டுள்ளது போல, எவ்வித திட்டக் குறிக்கோளோ, நேர்வழி நடத்தலோ காணோம். காங்கிரஸ் ஊழல்கள் கணக்கற்ற வகைகளில் நாடெங்கும் நாற்றமெடுக்கிற தென்பதை கடந்த தேர்தல் விளக்குவதென தேபார் கூறுவதோடு, நிகழ்ந்த முதுகளத்தூர் கொலைகளும், நிகழும் முந்த்ரா வகையரா ஷேர் விற்பனை விசாரணையும் சொல்லாமல் சொல்லி விளக்குகின்றனவே. காங்கிரஸ் ஊழலை அகற்ற அக்கட்சி யுள்ளேயே 'கொரடாக் கட்சி' யொன்று, காங்கிரஸ் ஸோஷலிஸ்ட் போரம் என்ற பெயருடன் 'இஞ்சிக்கூட்டம்' என்று ஏற்பட்டிருக்கிறது. இஞ்சிக் கூட்டம் என்றதும் இஞ்சி தின்ற குரங்கு ஞாபகம் வருகிறது. இஞ்சித் தின்னப் போவது காங்கிரஸ் தலைவர்களல்ல. பிறர்தின்ன, இவர்கள் இஞ்சி கொடுக்கப் போகிறார்கள். ஞாபகம் இருக்கட்டும்.

மேலும் தேபார் வருந்துகிறார், தன்னடக்கமும், சமதர்ம நோக்கும் நமது சமூகத்தாரிடை இல்லையாம். ஏன் இல்லை?— ஆங்கில அரசாட்சி காலத்தில் இருந்து வளர்ந்த இதனை, சுதந்திர இந்தியாவில் நாம் ஏன் மறந்து கைவிடவேண்டும்?—காரணம் தெளிவாகவில்லையா? — பொறுமைக்கும் ஓர் வரையில்லையா?—இந்திய சமூகம் பலஹீனப்பட்டுள்ளதாம். அதன் காரணம் அதன் குருட்டு மதாசாரங்களாம்.—அதாவது வர்ணாசிரம பேதமிக்கதும், குருட்டு நம்பிக்கையான கிரியைகளும் கொண்டிருப்பதாம். இடறிவிழுந்தால், இந்த ஒன்றுதானா காங்கிரஸ் தலைவர்கள் கண்களில் படுகிறது. ஜாதி வகுப்புபேதம் வளர்ப்பது, நாம் மேலே காட்டியபடி காங்கிரஸ் அதிகாரிகள்தாமே!— ஹிந்து சமூக மதாசாரங்கள் மீது வீண் பழிபோடுவானேன்!— இப்படிப் பேசித்தான் நம் நாடு நிலைகுலைந்து அவதிப்படுகிறது, சுதந்திரம் பெற்றும்!—தேபார் மேலும் சொல்கிறார், காங்கிரஸ் ஆட்சிமீது, பொதுஜன அவநம்பிக்கை மிகுந்துள்ளதைக் கடந்த தேர்தல் தெரிவித்ததென்று! இப்பொழுதாவது இவ்வுண்மை, காங்கிரஸ் தலைவர்களுக்கு உதயமாயிற்றே! ஜாதிபேதம் மறையப் பேசி ஜாதிபேதக் கட்சிகளையே பல்வேறு துறைகளிலும் மிகுத்து வந்தால், பொதுஜன நம்பிக்கை அரசாங்கத்திடை எப்படி எழக்கூடும்?— இருந்ததுவும் மறைய வேண்டியதுதானே. மதபக்தி மறைந்தால், தேசபக்தியும், ராஜபக்தியும் மறையத்தானே செய்யும்!—சுயநலப் பக்திதானே மிகும்!—

காங்கிரஸ் மகாநாட்டில், கடைசியாக, உலக நாடு விஷயங்களில் இந்தியா, பாரபட்ச பங்கெடுக்காது, நடுநிலைமை நின்று, சமாதானத்தூதனாக நிற்குமென்ற தீர்மானம் முடிவேறியது. உள்நாட்டில், காஷ்மீர், பாகிஸ்தான், கோவா பிரச்னைகள் தீர்ந்து சமாதானம் நிலவியபாடில்லை: வடஇந்தியா, தென் இந்தியா; பிராமணர், திராவிடர், நிலச்சுவான்தார், பயிரிடுவோர், ஆட்சிமொழி, மாகாண மொழி, தாய்மொழி—என்றெல்லாம் நம் தலைவர்

களை பாரபட்சக் கட்சிகளைக் கூட்டிப் போராட்டங்களில் பங்கெடுத்து வருகையில் இதே நாடா இதர நாடுகளுக்குப் பாரபட்சமற்ற உண்மைச் சமாதான தூதராக நடுநிலை நிற்கக்கூடும்? பெரும் வல்லரசுகளாகிய அமெரிக்காவும், யுனைடெட் கிங்டமும், ருஷ்யாவுமாக உறுமிக் கொண்டிருக்கையில் அவர்களிடை பொருளாதார உதவி எதிர்பார்த்து நிற்கும் இந்தியாவையா அவர்கள் உண்மைச் சமாதான தூதுவரென உண்மையில் மதிப்பர்? அவரவர்களது பலாபலம் திடப்படும் வரையில் நம்மை ஏதும் சொல்லாது யாவரும் மதிப்பதுபோலத்தான் பசப்புவார்கள். அவர்களிடை ஒருவர்பலத்துச் சிறிது முரண்பாடு மிகுந்ததுமே, யாவருமாக ஒருவர் கழுத்தின்மீதொருவர் பாய்ந்து நம்மைப் பிரித்துக் கலைத்து யார் எப்படிக் கபளீகரிக்கலாமெனவும் சிந்திக்கமாட்டார்களா!—சரித்திரம் விளக்கும் இந்த பெரிய அரசியல் மர்மமறியாது நாம் தப்பளை வைத்தியம் செய்து போவது என்ன மதியினர்!

இந்நிலையில் 1958-ம் வருஷம் ஜனவரி மாதம் 24-ந் தேதி வெள்ளிக்கிழமை சரியாக மாலை 4 மணிக்கு, சென்னை மாகாணப் புதிய கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி, காங்கிரஸ் மகாநாடு கூடிய பிராக்ஜோதிபூரிலிருந்து, நமது சென்னை மாகாணத்திற்கு, சேவா யாத்திரையார்த்தம் வந்து, கவர்னர் பதவியேற்றுள்ளார்: காங்கிரஸ் ஆட்சியாளருக்குத்தான் நாள், கிழமை, வேளைகள் பார்ப்பதில் நம்பிக்கை கிடையாதே—68 வயதான முதிர்ந்த அனுபவசாலி இவர். தேர்ந்த காங்கிரஸ் தொண்டர். சமீபத்தில் தேக அசௌக்ய காரணத்தால், அஸ்ஸாமில் பதவி நீத்து ஓய்வு கொண்டிருந்தார். மேதியார் வரவு நல்வரவாகுக!—இவர் ஆட்சியிலாவது நமது மாகாணம் நலம் பெறுமாக!—

மேதியார் வாழ்க!—மேதினியார் வாழ்க!

காங்கிரசு சீர்ப்படுக!

கண்காக்ஷி

கமலா! நீ எக்ஸிபிஷனுக்குப் போகவேண்டுமென்றாயே, இன்று ரதஸப்தமி என் சிநேகிதையிடமிருந்து இதோ தட்டுடன் எக்ஸிபிஷன் வந்திருக்கிறது பாரு! கரும்புத் துண்டை டார்ச்சு விளக்கு, அக்ரோட்டு பாதாம் பருப்பு, இவைகளால் அஸல் ஆமை, பேரீச்சம் பழத்தினால் வண்டு, காகிதத்தில் ரோஜாப்பூவில் கர்ஜூரி பழம் வண்டு போலவும், சர்க்கரையில் ரோஜா புஷ்பம். சாதா பொம்மை கையில் ப்ளாஸ்டிக் டப்பியில் பப்பர்மெண்டு வைத்து ட்ரம் அடிப்பது போன்றும், சர்க்கரை மிட்டாய் கிண்ணம், வெள்ளிக்கிண்ணம் ப்ளாஸ்டிக் டப்பிகள் முதலியவைகளுடன் தின்பண்டங்களும் வைத்திருப்பதைப் பாரு. எல்லாம் கையினாலேயே செய்திருக்கிறாள். இதல்லவோ உண்மை எக்ஸிபிஷன்.

விமலா: ஆச்சரியம் உண்மை எக்ஸிபிஷன் இதுதான்.

என்னைக் கவர்ந்த காந்தி

ஸ்ரீ. கே. பாஷ்யம் M.L.C. [Ex Minister]

எனது வாழ்க்கையை வகுப்பதில் பெரும் பங்கு கொண்டவர்கள் இரு புருஷோத்தமர்கள். ஒன்று மகாத்மா காந்தி இரண்டாவது ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்கார். எஸ். சீனிவாசய்யங்கார் சட்டத்தின் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தது மட்டுமன்றி என்னை அரசியலிலும் புகுத்தினவர். இதில் எனக்கு ஒரு குறை. நான் அரசியலில் நுழைவதற்குத் தயாராக இல்லாதபோது என்னை அரசியலில் நுழைத்து விட்டார். நான் அரசியலில் தீவிரமாக ஈடுபட விரும்பிய போது அவர் அரசியலை விட்டு வெளியேறிவிட்டார்.

நான் மகாத்மா காந்தியை முதன் முதலாக பார்த்தது 1918ல் பஞ்சாபில். (ஆனால், சந்தித்துப் பேசவில்லை). அச்சமயம், பஞ்சாப், ஏன் நாடு முழுவதுமே ஜலியன் வாலாபாக் படுகொலையின் காரணமாக கொந்தளித்துக் கொண்டிருந்தது. அரசாங்கத்தினரால் மேற்படி படுகொலையைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட கமிட்டியுடன் திருப்தியடையாமல், இராணுவச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னும் பின்னும் பஞ்சாப் மக்களைத் துன்புறுத்திய செய்கைகள், கொடுமைகள், அக்கிரமங்களை விசாரிக்க உத்தியோகப் பற்றில்லாத ஒரு கமிட்டியைக் காங்கிரஸ் கமிட்டி நியமித்தது. அந்தக் கமிட்டியில் மகாத்மா உள்பட பல பிரமுகர்கள் இருந்தனர். எனது தம்பி K. சந்தானம் அந்தக் கமிட்டியின் காரியதரிசி. அந்தக்கமிட்டி, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் செய்த அட்டூழியங்கள், செய்யாமல்விட்ட தவறுகள் இவைகளைப் பற்றி தீவிர விசாரணை செய்து முக்கியமான விவரங்களைச் சேகரித்தது. கமிட்டியின் காரியாலயம் இருந்தவீட்டிற்கு, காந்தியைப் பார்ப்பதற்காக என் தம்பி என்னை அழைத்துச் சென்றார். அப்போது காந்தி தமது சகாக்களுடன் தாங்கள் வெளியிடவேண்டிய அறிக்கையைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருந்தார். அப்போது அவருடன் சாவகாசமாய் பேச சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஆயினும் அவர் பெரிய தீரன், சத்தியவந்தன் என்ற எண்ணம் உதயமாயிற்று. அவரிடம் எனக்கு பெருத்த மதிப்பும் ஏற்பட்டது. அடுத்தாற்போல் அமிர்தசரஸில் நடந்த காங்கிரஸின் போது நான் காந்திஜீயின் பேரில் கொண்ட பற்றும் மதிப்பும் அதிகரித்தன. அப்போது காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் பஞ்சாப் படுகொலை

சம்பந்தமான தீர்மானத்தைக் குறித்து பலத்த சர்ச்சை நடந்தது. ஜனங்கள் செய்த அக்கிரமச் செயல்களைப் பற்றியும் காந்தி ஒரு திருத்தம் கொண்டுவர விரும்பினார்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, கவர்மெண்டார் செய்த அட்டூழியங்களைக் கண்டிப்பதுடன் ஜனங்கள்செய்தபலாத்காரச் செயல்களையுங் கண்டிக்க வேண்டும் என்றது. அதைப் புறக்கணித்ததால் மனம் நொந்து காந்திஜி காங்கிரஸை விட்டுவிலக விரும்பினார். மறுநாள் இத்திருத்தத்தைத் தலைவர்கள் ஏற்றனர். பகிரங்க காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் காந்திஜீ மனம் உருக பேசின பேச்சுக்கள் மனதைக் கவர்ந்தது. எச்சமயத்தில் உண்மையிலிருந்து பிறழக் கூடாது என்ற காந்தி தத்துவம் அப்பேச்சில் பிரதிபலித்தது. அவருடைய முடிவுரை இன்னும் என் காதுகளில் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. அவர் சொன்னதாவது :—

"சர்க்கார் செய்த பெருந் தவறு ஜனங்களைப் பலாத்காரத்தில் தூண்டிவிட்டது என்பதில் சந்தேகமில்லை. கவர்மெண்டார்தான் பித்து பிடித்தது போல் நடந்து கொண்டார்கள். ஜனங்கள் ஏன் தங்கள் சித்தத்தை இழக்க வேண்டும். நான் இறுதியாகக் கூறுகிறேன். பைத்தியத்துக்கு மருந்து பைத்தியம் அல்ல. பைத்தியத்துக்குச் சரியான எதிர்ப்பு காந்தமுள்ள அஹிம்சையே. அப்படிச் செய்தால் நம் லட்சியமும் கட்டாயம் ஈடேறும்."

அடுத்தாற்போல் நான் காந்திஜியைச் சந்தித்து என் தம்பி கே. சந்தானம், லாலா லஜபதி ராய் முதலிய பல தலைவர்களுடன் லாகூர் மத்திய சிறையில் சிறை வைக்கப்பட்டிருந்த சமயம். எனது தம்பியினுடைய சட்ட ஆலோசகன் என்ற முறையில் நாள் முழுவதும் சிறையில் தங்கினேன். அப்போது நான் லாலா லஜபதி ராய் முதலிய தலைவர்களுடன் ஒரு நாள் முழுவதும் அளவளாவும் சந்தர்ப்பம் வாய்த்தது.

என் தம்பி ஜெயிலில் இருக்கும்போது, அவனுடையமனைவியையும் குழந்தைகளையும், லாகூரில் தனியாக விட்டு வைக்க விரும்பாமல் ஆமதாபாத்திலுள்ள காந்தி ஆசிரமத்தில், தங்க வைப்பதற்காக அவர்களை அழைத்துச் சென்ற சமயம் காந்தியைச் சந்தித்து அவர்கள் அங்கு தங்குவதற்கான வசதிகளைக் குறித்துப் பேசினேன். அவர்கள் சவரட்சணை செலவுக்காக, என் தம்பி, சிறைவாசம் செய்தவரைக்கும் மாதா மாதம் ரூ 100-0-0 காந்திஜீக்கு அனுப்பி வைத்தேன். காந்திஜீ அப்படியே அத்தொகைகளைச் சேர்த்து வைத்து என் தம்பி மனைவியும் குழந்தைகளும் ஆசிரமத்தை விட்டுச் சென்றபோது அவர்களிடம் கொடுத்தனுப்பியது என்னைத். திகைப்படையச் செய்தது.

1922-ம் வருடம் மார்ச் மாதம் 18-ம் தேதி காந்திஜீ ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்ததற்காக சிறை செய்யப்பட்டார். அவர் கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலம், வீரம்,

எளிமை, உண்மை இவைகளுக்கு உதாரணமாக விளங்கியது. தான் விவசாயி, நெசவாளி என்று சொன்னது மக்கள் மனதைக் கொள்ளைகொண்டது. காந்திஜீ சிறை செய்யப்பட்ட செய்தி வெளிவந்ததும் எஸ். சீனிவாசய்யங்கார் தமது வீட்டில் ஒரு சிறிய கூட்டம் கூட்டினர். எல். ஏ. கோவிந்தராகவ அய்யரைப் போன்ற மிதவாதத் தலைவர்களும் அக்கூட்டத்தில் இருந்தனர். நாங்கள் எல்லோரும் அந்நிய துணிகளைப் பகிஷ்கரிப்பதென்றும் காதியை உடுத்துவதென்றும் தீர்மானித்தோம். அந்நாள் முதல் இன்றுவரை விடாமல் நான் கதர் உடுத்தி வருகிறேன்.

அடுத்தாற்போல், அன்னிய நாட்டு ஜவுளித் துணிகள் விற்கும் கடைகளைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தை நான் நடத்திய போதும், அதற்காக போலீஸ், மக்கள் பேரில் தடியடிப் பிரயோகம், செய்த போதும் காந்திஜிக்கும் எனக்கும் சம்பந்தம் ஏற்பட்டது. அப்போது காந்திஜீ "நீங்கள் செய்யும் இது போன்ற சேவை நாட்டைத் தற்போதைய நிலைக்கு முன்னேறச் செய்தது" என்ற செய்தியை தந்தி மூலம் தெரிவித்தார். இத் தந்தி இன்னும் என்னிடம் இருக்கிறது.

இரண்டு வருஷங்கள் கழித்து காந்திஜீ சென்னைக்கு விஜயம் செய்தபோது எனது வீட்டில் வந்து தங்குமாறு வேண்டிக் கொண்டேன். அவரும் வந்து தங்கினர். அப்போது அவரிடம் நெருங்கிப் பழகினேன். எல்லோரும் அவரைப் பார்த்துவிட்டுச் சென்ற பிறகு சாவகாசமாக என்னுடன் பேசுவார். அப்போது அவரிடம், "நான் சென்னையில் பல தேசீய இயக்கங்களுடன் ஈடுபட்டிருந்த போதிலும் அவைகளில் ஒன்றிலேனும் தீவிரமாக ஈடுபட்டு ஒரு காரியத்தைச் செய்தேன், அல்லது ஒரு இயக்கத்திற்கு நான் பொறுப்பாளி என்று சொல்ல முடியவில்லை" என்று சொன்னது என் நினைவுக்கு வருகிறது. அப்போது நான் மதராஸ் மகாஜன சபா, மதராஸ் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி, மதராஸ் (சிவில்) ஒத்துழையாமை இயக்கம் காதி வஸ்திராலயம், (சிவில்) சுதந்தர சங்கம் இவைகளின் தலைவராகவும், ஹிந்தி பிரசார சபையின் டைரக்டராகவும் இருந்தேன். அப்போது காந்திஜீ அவர்கள் சிரத்தையுடன் மனப்பூர்வமாக சொன்னதாவது "தனக்கென்று தனிப் பெயர் எடுக்க விரும்பாமல் மக்கள் நலனுக்காக பல இயக்கங்களிலும் கலந்து சேவை செய்பவனே தைரியசாலி, மக்களின் மதிப்பிற்குரியவன்" என்ருர்.

காந்திஜீயின் தென்னிந்திய ஹரிஜன இயக்க யாத்திரை என்னுடையவும் இப்போது இந்திய உயர்நீதிமன்ற நீதிபதியாக உள்ள கனம் B. ஜகந்நாததாஸ் அவர்களுடைய பொறுப்பிலும் விடப்பட்டிருந்தது. எல்லா ஏற்பாடுகளையும் செய்யும் பொறுப்பு எங்களுடையது. காந்திஜீ நாங்கள் செய்த ஏற்பாடுகளைச் சிலாகித்து நேரில் எங்களைப் பாராட்டினர். காந்திஜி மறைவின்பிறகு நான் பொது வாழ்விலும் தீவிரமாக ஈடுபடவில்லை.

★ கண் திறந்தது ★

❋

"என்ன மிஸ்டர்! இன்னுமா மேக்கப் முடியவில்லே !! அது பாழாய் போச்சுப் போ! இப்ப மணி என்ன தெரியுமா? 7-30 இனிமே டாக்சி பிடித்து நாம் எழும்பூர் போவதற்குள் வண்டி தாம்பரம் போய்விடும் போலிருக்கிறதே !!

என்ருன் ஆடலரசு.

"என்னப்பா! மணி 7-30 தான் ஆகிறது. டாக்சி 10 நிமிஷத்தில் போய்விடாது. இதோ இருக்கிறது படுக்கை அதைக் கட்டியவுடன் கிளம்பிவிட வேண்டியதுதான்! அதற்குள் அப்படியே ஆடுகிருயே! நன்ருகத்தான் வைத்தார்கள் உனக்கு பெயர் 'ஆடலரசு' என்று"

என்ருன் அரங்கசாமி.

படுக்கைகளைக் கட்டி முடித்து பெட்டியையெல்லாம் சரிபார்த்து எடுத்து வைத்துவிட்டு கை கெடியாரத்தைப் பார்த்தான் "மணி 7-45" ஆகிவிட்டது. சீக்கிரம் டாக்சியை கொண்டுவரும்படி ஆடலரசிடம் சொல்லிவிட்டு ஹாஸ்டல் நண்பர்கள் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டான் அரங்கசாமி. வாசலில் டாக்சி வந்து நின்றது. ஆடலரசும் அரங்கசாமியும்பெட்டிப் படுக்கையையெல்லாம் காரின் பின் வைக்கச் சொல்லிவிட்டு காரில் ஏறிக்கொண்டார்கள். ஆடலரசும் அரங்கசாமியும் இணைபிரியாத நண்பர்கள். கல்லூரியிலே கூட ஒருவர் பக்கத்தில் ஒருவர் உட்காராவிட்டால் சரி வராது. அரங்கசாமி கல்லூரிக்கு "மட்டம்" என்ருல் ஆடலரசும் மட்டம் போட்டுவிடுவான். இருவருக்கும் இரண்டு ஆண்டுகள் பழக்கம் தான். சென்னையில் கல்லூரியில் சேருவதற்கு முன்

அருளாளன்

ஒருவரை ஒருவர் அறியார்! ஆனல் கல்லூரியில் இண்டரில் சேர்ந்தது முதலே இருவரும் நெருங்கிப்பழக ஆரம்பித்து விட்டார்கள். கல்லூரிக்குச் சென்ருலும் கடற்கரையானலும், சினிமாவானலும் நாடகமானலும் இருவரும் சேர்ந்துதான் காட்சியளிப்பார்கள். அரங்கசாமி இல்லாது ஆடலரசையோ, ஆடலரசு இல்லாது அரங்கசாமியையோ யாரும் காண முடியாது. அரங்கசாமிஉயிர் என்ருல் ஆடலரசு உடல். அத்தகைய நண்பர்கள் அவர்கள் இருவரும். இளைஞர்களாதலால் இளமை துடிப்பு இருவருக்கும் அதிகம். பெண்கள் விஷயத்தில்

இரண்டும் சேர்ந்தால் அவ்வளவுதான். வீதியில் செல்லும்பெண்களை ஜாடையாகக் கிண்டல் செய்வது முதல் இன்றைய கல்லூரி மாணவர்களுக்குரிய அத்தனை குறும்புகளுக்கும் குறைவு இல்லை. அரங்கசாமி ஆடலரசு என்றால் மருத்துவக் கல்லூரி மாணவிகளுக்கே ஒரு பயம்தான். அவர்களுடைய கீர்த்தி பெண்கள் வட்டாரத்தில் அப்படி இருந்தது. மருத்துவக் கல்லூரி பொருட்காட்சி வந்துவிட்டால் அவர்கள் செய்யும் கலாட்டாவிற்கு அளவே கிடையாது. அந்த நாட்கள் தான் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான நாட்கள்.

ஆடலரசின் சொந்த ஊர் காரைக்குடி. அரங்கசாமிக்கு கும்பகோணம். அப்பொழுதுதான் கல்லூரி கோடை விடுமுறை நாட்கள் துவங்கியது. கல்லூரி மூடியும் பதினைந்து நாட்கள் சென்னையில் உல்லாசமாக பொழுதைக் கழித்தார்கள். ஆடலரசும் அரங்கசாமியும். பிறகு, அன்றுதான் தங்கள் சொந்த ஊருக்குக் கிளம்பினார்கள்.

டாக்சி எழும்பூர் ரயில் நிலையத்தின் முன் வந்து நின்றது. கூலியைக் கூப்பிட்டு சாமான்களை எடுத்துக்கொள்ளச் சொன்னான் ஆடலரசு. அதற்குள் அரங்சாமி கும்பகோணத்திற்கு ஒரு டிக்கட்டும், காரைக்குடிக்கு ஒரு டிக்கட்டும் வாங்கிக்கொண்டு வந்தான்.

"என்ன பிரதர்! ஊருக்கா! இன்டோசிலோன் எக்ஸ்பிரஸ்தானே!" என்றான் முதுகிலே தட்டிக்கொண்டே நண்பன் முத்துசாமி.

"ஆமாம் மிஸ்டர்! நீங்க எங்க இப்படியே!"

—அரங்கசாமி.

'நம்ப சொந்தக்காரர் ஒருத்தரை இந்த வண்டியிலே ஏற்றிவிட வந்தேன்!"

—முத்துசாமி

"அப்படியே கொஞ்சம் "கலர்" ஏதாவது உலாவுதான்னு வட்டமிடு நீங்க போலிருக்கு".

"ஆமாம் பிரதர்! பார்த்தேன்! ஒண்ணும் புண்ணியமில்லே! எல்லாம் மட்டம்! ஒரு நாலஞ்சு பார்த்தேன்! ஆனால் எல்லாம் பட்டிக்காடு! ஒண்ணும் சரியில்லே! ஆனல் அந்தக்கோடியிலே இரண்டு மூணு இருக்கு! காலேஜ் ஸ்டூடண்ட் மாதிரி தான் தெரியுது! அது பரவாயில்லே! எல்லாம் ஐம்பது மார்க்குக்கு மேல் கொடுக்கலாம்! போய் வேணும்னு பாருங்க! You may have a Sweet Journey perhaps. (இனிமையான பயணமாக இருக்கும்)"

"போய் பார்ப்போம்! ஆடலரசு காப்பி சாப்பிடப் போயிருக்கான்! அவன்

வரட்டும்! நம்மவிட அவன் இந்த விஷயத்தில் எல்லாம் பெரிய ஆளு! அவனை விட்டு ஒரு நோட்டம் பார்த்து விட்டு வரச் சொல்றேன்''

''சரி'' அப்போ நான் வர்ரேன்! சிர்.யூ.!''

முத்துசாமி.

கல்லூரி மாணவர்களில் பலருக்கு, ஏன் பொதுவாக இன்றைய இளைஞர்களுக்கே பல வாலிப பயித்தியங்கள் உண்டு. கல்லூரிக்கோ பள்ளிக்கோ செல்லுகிற மாணவிகளின் ஓரமாக உராய்வது போன்று சைக்கிளிலோ காரிலோ செல்லுவது. அப்படி வேகமாய் போய்க் கொண்டிருக்கும் போது மாணவிகளுக்குப் பக்கத்தில் சென்றவுடன் திடீரென்று ஹாரனை அடிப்பது. உடனே மாணவிகள் அதைக்கண்டு பயந்து மிரள்வதைப் பார்த்து மகிழ்ச்சியடைவது போன்ற பல ரகம் உண்டு.

இன்றைய இளைஞர்களிலே பலருக்கு கடவுள் பக்தியோ பற்றோ இருக்கிறதோ இல்லையோ! ஆனால் நாள் தோறும் கோயிலுக்குச் செல்லும் இளைஞர்களின் எண்ணிக்கை குறையவில்லை. அதற்கு மாறாக கோயில்களில் முதியவர்களை விட இளம் கல்லூரி மாணவர்களையும் மாணவிகளையும் தான் ஏராளமாகக் காண்கிறோம். இப்பொழுதெல்லாம் கடற் கரைக்கும், சினிமாவுக்கும் போவதைப் போல கோயிலுக்குச் செல்லுவதும் இளைஞர்களுக்கும் வயது வந்த பெண்களுக்கும் ஒரு பொழுதுபோக்குபோல ஆகிவிட்டது. கோயிலுக்கு சமய உணர்ச்சியோடோ அல்லது கடவுள் பற்றாலோ அத்தகைய இளைஞர்களோ, மங்கையர்களோ, வருவதில்லை. அதை அவர்கள் அணிந்து கொண்டு வரும் ஆடையும் அலங்காரமும், நன்கு புலப்படுத்தும்.

இதை யெல்லாம் விட இன்னுமொரு மோசமான செயல் இன்றைய இளைஞர்களிடத்தில் நாம் பார்க்கிறோம். ரயிலில் எங்கேனும் பிரயாணம் செய்தால் அழகுள்ள பெண்கள் உள்ள இடமாக பார்த்து அங்கு ஒரு இடம் பிடிப்பதுதான் அது. இது இப்பொழுதெல்லாம் கல்லூரி மாணவர்களிடத்தில்அதிகமாக காணப்படுகிறது.

''எவ்வளவு நேரமப்பா! சரி! சரி! முத்துசாமியைப் பார்த்தேன்! கோடி கம்பார்ட்மெண்ட்லே ஏதோ இரண்டு மூன்று ''கலர்'' இருக்காம். நீ போய் ஒரு நல்ல இடமாக பிடி பார்க்கலாம். அதற்குள் நான் போய் காப்பி சாப்பிட்டு விட்டு சிகரெட் வாங்கிட்டு வந்து விடுகிறேன்'' என்றான் அரங்கசாமி.

ஆடலரசு, அரங்கசாமி குறிப்பிட்டது போல கடை

சியாக உள்ள இரண்டு மூன்று கம்பார்ட்மெண்ட்களை சுற்றிப் பார்த்தான். அதிலே ஒருவள் மிகவும் அழகானவள். அவள் உடுத்தியிருந்த சிகப்பு நிற மெல்லிய உடையே அவனை மிகவும் கவர்ந்துவிட்டது. அந்த கம்பார்ட்மெண்டில் கூட்டமே இல்லை. அவளுக்கு எதிரில் ஐம்பது வயதுள்ள ஒரு அம்மா உட்கார்ந்திருந்தாள். அது அவள் தாயாக இருக்க வேண்டும். அங்கே வேறு யாரும் இல்லை. அந்த கம்பார்ட்மெண்டில் ஏறி வழக்கமான தன்னுடைய பார்வையை ஒரு முறை அவளை நோக்கிச் செலுத்தினான் ஆடலரசு. அவளைப்பார்த்து மெல்ல முறுவலித்தான். ஏதோ ஒரு சினிமா பாட்டை சீட்டி அடித்துக் கொண்டு சிறிது நேரம் அந்த பெஞ்சில் உட்கார்ந்தான். பிறகு அங்கு தன் கைகுட்டையை போட்டு விட்டு விடு விடு என்று கீழே இறங்கி சாமான்களை வைத்திருந்த இடத்திற்குப் போனான். அதற்குள் அரங்கசாமியும் வந்துவிட்டான்.

"டேய் அரங்கா! நம்ப பாடு யோகம் தான் இன்றைக்கு! அருமையான "கலர்" ரொம்ப ஜோர்!! கோடியிலே இருந்து மூன்றாவது பெட்டி. சீக்கிரமே கிளம்பு" என்றான் ஆடலரசு.

கூலி சாமான்களைத் தூக்கிக்கொண்டான். ஆடலரசு முன்னே நடந்தான். அரங்கசாமி அவனைப் பின் தொடர்ந்தான். பெட்டி படுக்கையை யெல்லாம் ஒன்று ஒன்றாக வண்டிக்குள் ஏற்றினான் ஆடலரசு. ஒரு அழகான மங்கையோடு இன்று ரயிலில் பிரயாணம் செய்யப்போகிறோம் என்ற மகிழ்ச்சி அரங்கசாமியை உலுக்கியது. அனுயாசமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான். வண்டியின் ஓரமாக நின்று கொண்டு அவளைப் பார்த்தான். ஆனால் அவள் முகம் அவனுக்குத் தெரியவில்லை. அவளுடைய பின்னழகைத் தான் ஓரளவு ரசிக்க முடிந்தது. சிகரெட் புகையை ஊதிக்கொண்டே வண்டிக்குள் நுழைந்தான்! அரங்கசாமி.

அரங்கசாமியும் ஆடலரசும் ஆரணங்கு அமர்ந்திருந்த கம்பார்ட்மெண்ட்டில் பக்கத்து அறையில் உட்கார்ந்துகொண்டு அட்டகாசம் செய்து கொண்டிருந்தனர். பக்கத்து அறையிலிருக்கும் பெண்ணின் நடை உடை பாவனைகளையெல்லாம் மறைமுகமாக விமர்சனம் செய்துகொண்டிருந்தார்கள்.

தாங்கள் அன்று வனிதை ஒருவளுடன் உல்லாசமாக ரயில் பயணம் செய்யப் போவதைப் பற்றி மகிழ்ந்து கொண்டார்கள். அது அவர்

களின் அட்டகாச சிரிப்புடன் கூடிய பேச்சில் வெளியாயிற்று.

"அரங்கசாமி நான் அவளை மனப்பூர்வமாக காதலிக்கிறேன். எப்படியோ என் மனது அவளிடம் போய் ஒட்டிக்கொண்டு விட்டது. இனி யாராலும் அதை பிரிக்க முடியாது. தயவு செய்து இந்த விஷயத்தில் நீ குறுக்கிடாதே. எனக்காக இந்த தியாகத்தை நீ செய்ய மாட்டாயா அரங்கசாமி" என்று உருக்கமாய் கேட்டுக் கொண்டான். இதையெல்லாம் கவனித்துக் கொண்டே இருந்தாள் அந்தப் பெண்.

அரங்கசாமி:—"ஆடலரசு உன் இஷ்டம்போல் நடக்கட்டும். நான் வேண்டுமானால் இரண்டு பெட்டி தாண்டி ஒரு இடத்தைப் பிடித்துக் கொள்ளுகிறேன்" என்ருன்.

"வேண்டாம், வேண்டாம். நீ இந்தப் பக்கத்திலேயே இரு. நான் அவள் இருக்கும் அறையில் உட்கார்ந்து கொள்ளுகிறேன் என்ருன் ஆடலரசு.

"அது சரி! உன்னுடைய உள்ளத்தை திருடிய அந்தக் கள்ளியை நான் ஒரு முறையாவது பார்க்கலாம் அல்லவா?" என்ருன் அரங்கசாமி.

அவனும் அதற்கு ஒத்துக் கொண்டான்.

ஆடலரசு முன்னே சென்று ஒரு இடத்தில் உட்கார்ந்தான்.

அவனை பின்தொடர்ந்து அரங்கசாமி அறையினுள் நுழைந்து ஒரு முறை அறை முழுவதையும் நோக்கினன்.

ஆயிரம் ஈட்டிகள் அவன் இதயத்தில் பாய்வது போலிருந்தது.

"என்னங்க! நீங்க இன்னிக்கு ஊருக்குப் போகிறதா எனக்கு சொல்லவே இல்லையே! ஒரு கார்டு கூட எழுதவில்லை. ஊருக்கு கிளம்பிட்டிங்களா" என்ருள் அவள்.

அரங்கசாமிக்கு தலை சுழன்றது. கையிலிருந்த சிகரெட்டை அவசர அவசரமாக வெளியே வீசினன். உடம்பெல்லாம் வியர்த்து விட்டது.

"ரேவதி! நீயா? எங்கே இப்படி கிளம்பினய்?"

நா குழறிற்று. அவன் தொண்டை அடைத்துக் கொண்டது. அதற்கு மேல் அவனல் பேச முடியவில்லை.

"வாங்க மாப்பிள்ளை! செங்கல்பட்டு வரையிலே போகணும். அங்கே ரேவதி சின்னம்மா ஒருத்தர் இருக்காங்க தெரியுமில்லை உங்களுக்கு! அவங்க ரொம்ப நாளா ரேவதியை பத்து நாள் வந்து இருந்துவிட்டு போகணும்னு சொல்லிவிட்டிருக்காங்க! அதான் அவங்கவீட்டுக்குபோய்விட்டு வரலாம்னு புறப்பட்டோம்.

ரேவதிகூட சொல்லிச்சு! உங்களுக்கு காலேஜ் இப்ப விடுமுறை. நீங்ககூட ஊருக்குப் போனாலும் போயீங்க! கடிதம்கூட எழுதி உங்களை வீட்டுக்கு வரச் சொல்லணும்னு!" என்று சொன்னாள் ரேவதியின் அம்மா.

அந்த பெட்டியிலே இருந்த வனிதை வேறு யாரும் இல்லை. அரங்கசாமியின் சொந்த மனைவி ரேவதிதான்.

ரேவதியின் தாய் தந்தையர்கள் சென்னையில் அடையாரில் இருக்கிறார்கள். படிக்கும் பொழுது தனியாக குடும்பம் வைத்தால் படிப்புக்கு இடையூறு ஏற்படும் என்று கருதி அரங்கசாமியின் பெற்றோர்கள் அவனை ஹாஸ்டலில் சேர்த்திருந்தார்கள். அரங்கசாமி மாதத்திற்கு இரு முறையாவது ரேவதியின் வீட்டிற்குச் சென்று வருவான். அன்று அவன் ஊருக்கு புறப்படும் பொழுது ரேவதிக்கு அதை சொல்லவில்லை. ஊருக்குப் போய் கடிதம் எழுதிக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டான்.

அரங்கசாமியின் நிலையைப் பார்த்த ஆடலரசு அவனிடம் ஏதும் பேசத் தோன்றாமல் விடு விடுவென்று வண்டியிலிருந்து இறங்கி நான்கு பெட்டிகள் தாண்டி ஏறிக்கொண்டான். அரங்கசாமியின் திருமணத்துக்கு அவன் போகவில்லை. அப்பொழுது தான் அவன் முதல் தடவையாக ரேவதியைப் பார்த்தான்.

ரயில் ஊதிக்கொண்டே கிளம்பிற்று. அரங்கசாமியின் இதயமும் குமுறிற்று. புயலில் சிக்கிய வாழைக் குருத்தைப் போல தவித்தான். ரேவதி அவனை ஒரு நோக்கு நோக்கினாள்! ஐயோ! அந்தப் பார்வைக்கு எவ்வளவு பொருள்! அவனுக்கு ஒரு முறை அழுது அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் போலிருந்தது.

"ரேவதி! இங்கு வா!'

அரங்கசாமி அவளை தனியே அழைத்தான். அவளுடைய தாயின் பார்வைக்கு மறைவாக இருவரும் பக்கத்து அறைக்குச் சென்றார்கள்.

"ரேவதி! என்னை மன்னித்து விடு! என்னுடைய தீய செயல்களுக்கும், கெட்ட எண்ணங்களுக்கும், இன்று இறுதிதான்! அழகு உருவமாகிய நீ இருக்க நான் ஏன் தவறான பாதையில் போக வேண்டும்? நீ என் கண்களைத் திறந்து விட்டாய் ரேவதி. இனி நான் பழைய அரங்கசாமி அல்ல! நான் புதியவன்! நான் புதியவன்!" அவன் உரக்க கூவினான். கண்களில் நீர் தாரைதாரையாக வழிந்தது. அவளுடைய பாதங்களைப் பற்றப்போ

னன் அரங்கசாமி. அதற்குள் அவள் அவனுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டு "இது என்ன பயித்தியமா உங்களுக்கு! இப்பொழுது என்ன நடந்து விட்டது! மனதை வீணுக அலட்டிக்கொள்ளாதீர்கள்" என்று சொல்லிக் கொண்டே அவனுடைய கரத்தை உணர்ச்சியுடன் பற்றினுள். அது அவனுக்கு மிக ஆறுதலாய் இருந்தது.

அவனுக்கு அப்போது கல்லூரித் தலைவர் மணவாளர், மாணவர்கள் செய்த கிளர்ச்சியின் போது சொல்லிய சொற்கள் நினைவுக்கு வந்தன.

அந்த மாணவர் கிளர்ச்சியே ஒரு விசித்திரமானது. மாணவிகள் ஹாஸ்டலுக்கும் மாணவர்கள் ஹாஸ்டலுக்கும் ஒரு பாதை இருந்தது. அந்தப் பாதையால் மாணவ மாணவிகளின் ஒழுக்கத்திற்கு கேடு வரக் கூடிய சூழ்நிலை தோன்றலாயிற்று. எனவே கல்லூரி நிர்வாகிகள் மாணவர்கள் ஹாஸ்டலுக்கும் மாணவிகள் ஹாஸ்டலுக்கும் இடையேயுள்ள பாதையை அடைத்து சுவர் எழுப்பி விட்டார்கள். அதை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அப்பொழுது கல்லூரித் தலைவர் மணவாளர் கண்களில் நீர் மல்க சொல்லிய சொற்கள் இதுதான் :—

மாணவர்களே இன்று உங்களுடைய எதிர்கால நல்வாழ்வு கருதி, கல்லூரியின் உயர்வைக் கருதி இந்தப் பாதையை கல்லூரி நிர்வாகிகள் அடைத்திருக்கிறுர்கள். ஆனுல் நீங்கள் அதை எதிர்த்து கிளர்ச்சி செய்கிறீர்கள். நீங்கள் எல்லாம் நன்கு கற்றவர்கள் இனியும் பலவித சாத்திரங்களை படிக்கப் போகிறீர்கள். நான் உங்களுக்கு கூறும் ஒரே வார்த்தை இதுதான்!

"இப்பொழுது நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். அந்த மகிழ்ச்சிக்கு நான் இடையூராக இருப்பதாகவும் நீங்கள் கருதலாம். உங்களுக்கு நான் சொல்லுவது இப்பொழுதுபுரியாது. நாளைக்கு நீங்கள் மணமாகி உங்களுடைய பெண்களை இதே கல்லூரிக்கு படிக்க அனுப்பும் பொழுதுதான் நீங்கள் செய்யும் செயல்களின் கொடுமையையும் தன்மையையும் நீங்கள் உணர்வீர்கள்."

அந்தச் சொற்கள் மீண்டும் மீண்டும் அவனுடைய மனத்தில் தோன்றி வதைத்து மறைந்தன.

விடுகதை

ஊசி மனிதனுக்கு
உடம்பெல்லாம் திருமணம்.
[ஜீமாகி]

அன்பும் அமலியும்

டி. எஸ். ராஜகோபாலன், பி. ஏ., எல். டி.

திருக்கண்ணமங்கை என்ற தலம், முன்பு பெரிய நகரமாகத் திகழ்ந்தது. நகரைச் சுற்றி வெகு தூரத்திற்கு நெடுந் தெருக்களும், கடைவீதிகளும், பத்தராவிப் பெருமாள் திருவிழாக் கொள்வதற்காகப் பெரிய மண்டபங்களும், தாமரைக் கயங்களும், செங்கழுநீர் ஓடைகளும், சோலைகளும் மல்கியிருந்தன. இம் மண்டபங்களுள் பாழடைந்தவை சிலவற்றை நாம் இன்றுங் காணலாம். ஏறக்குறைய ஐந்நூருண்டுகளுக்கு முன்பு இங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று, வைஷ்ணவ சமயாசாரியர்களுடைய நூல்களில் இடம் பெற்றுவிட்டது. "நாம் ஈச்வரனுக்குச் சொத்து (உடைமை); நம்மை உடைய ஈச்வரன் நமக்கு ஸ்வாமி அதாவது சொத்தை உடையவன்; உடைமையைக் காப்பாற்றுவது உடையவன் கடமையாதலால், நம்மை நாம்காப்பாற்றிக்கொள்ள முயற்சிப்பது சரியன்று-ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் கூடாது" என்ற கொள்கைக்கு இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும்.

சித்திரா பௌர்ணமியன்று மாலை வேளை. நகரம் முழுதும் ஒரே குதூகலமாக இருந்தது. பணவம், முரசம் முதலியன முழங்க, தூரியம், காளம் முதலியன ஆர்த்தன. திருக்குளத்தைச் சுற்றிலுமுள்ள மாடவீதிகளில் தொடர்ந்து பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. ஆலயத்திற்கு எதிரே மலை முகடு போல் உயர்ந்த கொட்டகை அமைந்திருந்தது. இந்தக் கொட்டகையின் உட்புறம் முழுதும் வேலைப்பாடு வாய்ந்த சிலைகளால் அழகுற்று விளங்கியது. கொட்டகைக் கால்களில் வாழை மரங்கள் கட்டப்பெற்றிருந்தன; கொட்டகையில் நிரை நிரையாகப் பாகல், புடல், கத்தரி முதலிய கறிகாய்களும், கமுகங் குலைகளும், தென்னங் குலைகளும், மாவிலைத் தோரணங்களும், நறுமலர்த் தொங்கல்களும் செறிந்து, பார்ப்போரது கண்களைக் கொள்ளை கொண்டன. அருகிலுள்ள சோலைகளிலிருந்து நறுமலர்களின் மணத்தை இளங்காற்று கவர்ந்து, சொரிந்தது.

அஸ்தமனத்திற்கு இரண்டு நாழிகைக்கு முன்பு பத்தராவிப் பெருமாள் திருத்தேரிலிருந்து இறங்கித் தோளுக்கினியானில் மாடவீதியில் எழுந்தருளிக் கொண்டிருந்தார். தோளுக்கினியானின் இருமருங்கிலும், மலர்களால் சமைந்த பெரிய குடைகளை அடியார்கள் தாங்கி நின்றனர். சிலர் சாமரை வீசினர், சிலர் அகிற்புகை காட்டினர். மாளிகைகளின் ஓரமாக மக்கள் இறைவனுக்கு வழங்குவதற்காகத் தட்டுக்களில் சர்க்கரை, பழம், வெற்றிலைப் பாக்கு முதலியவற்றை ஏந்தி நின்றனர். முன்னே செல்லும் அத்யாபக கோஷ்டியில் பெரியோர்

நானூறு பேருக்குக் குறையாமல், கரங்கோத்து வரிசை வரிசையாகச் சென்றனர். அவர்கள் பாசுரங்களை ஓதும் தெளிவும், ஓதும்போது முகத்தில் காணப்படும் குறிகளும், அவர்கள் ஆழ்வாரது ஈரச் சொற்களையும், சொல் நயம், பொருள் நயம் முதலியவற்றையும் எங்ஙனம் மனதில் தேக்கியுள்ளனர் என்பதை வெளிப்படையாகக் காட்டின. இந்தக் கூட்டத்திற்கு நடுநாயகமாய் விளங்கியவர், ஐம்பது வயது வாய்ந்தவர் ஒருவர். இவரிடம் மற்றவர்கள் காட்டிய அன்பையும் வினயத்தையுங் கவனித்தால், இவர் அந் நகருக்கே நாயகமாய் விளங்குபவர் என்பது தோன்றும். சிறிது வாட்டமுற்ற இவரது சரீரம், இவர் உடல் நலத்தைச் சிறிதும் பேணுதவர் என்பதையும், இவர் உடுத்திருந்த சாமானியமான ஆடைகள், இவர் ஆடம்பரத்தைச் சிறிதும் விரும்பாதவர் என்பதையும், ஆடைகளின், மாசற்ற வெண்மையானது இவர் தூய மனப்பான்மை வாய்ந்தவர் என்பதையும் காட்டின. இவரது பரந்த முகம், அறிவுக் கதிர் கொண்டு விளங்கியது; காதளவும் நீண்டு மலர்ந்த கண்களும், துடையளவும் நீண்ட புயங்களும் இவர் பார்மகட்கு ஓர் அரும்பெறல் என்பதைத் தெளிவுறுத்தின. பெரிய திருமொழியில் "கண்ணுளன் கண்ணமங்கை நகராளன் கழல் சூடி, அவனை உள்ளத்து (எ)ண்ணுத மானிடத்தை எண்ணுத போதெல்லாம் இனியவாறே" என்ற அடிகளை அடியார்கள் ஓதும்போது, இவர் சிறிது மெய்மறந்து நின்றுவிட்டார். இதுகண்டு அடியார்கள், "ஆண்டான்! இதென்ன?" என்று கேட்க, இவர், "ஒன்றுமில்லை; 'மானிடவரல்லரென்று என் மனத்தே வைத்தேனே' என்பது நினைவுக்கு வந்தது. இது வரையில் எண்ணுதிருந்தேன்; இனியதாயிருந்தது. இப்போது எண்ணுத மானிடர்க்கு என் செய்வது?

நாவாயி லுண்டே, நமோ நாராயணு
வென்(று)
ஓவா துரைக்கு முரையுண்டே—மூவாத
மாக்கதிக்கட் செல்லும் வகையுண்டே'
என்ஞெருவர்
தீக்கதிக்கட் செல்லுந் திறம்?
நாராயணேதி சப்தோஸ்தி
வாகஸ்தி வசவர்த்தி நீ |
ததாபி நரகே கோரே
பதந்தீதி கிமத்புதம்?" ||

என்று பலவாறு சொல்லி முன்போல் ஓதிக் களித்துச் சென்றார்.

அஸ்தமித்து ஒரு நாழிகை இருக்கும். கீழ்த் திசையில் தொடுவானத்திற்குச் சற்று மேலே நின்று சீதக் கதிர்களை நிலப் பரப்படங்கலும் பரப்பினன் சந்திரன். அடியார்கள் திருக்குளத்தில் அவபிரதம் குடைந்தாடி மகிழ்வுடன் வெளியேறினர். பத்தராவிப் பெருமான், கொட்டகையில் பத்தி உலாவுதலும் திருவந்திக் காப்பும் கண்டருளி உள்ளே எழுந்தருளினர். மக்கள் கூட்டம், கடலின் கரையில் சேருந் திரைகள்போல் உள்ளே சென்றுகொண்டிருந்தது. கூட்டம் சிறிது குறைந்ததும் காவற்

காரன் நந்தன் என்பான், கைத் தடியோடு கோபுர வாயிலில் நின்று கொண்டிருந்தான். நாயொன்று உள்ளே நோக்கிய வண்ணம் வந்து கொண்டிருந்தது. இவன் கைத் தடியைத் தூக்கினான், நாய் ஓடிவிட்டது; பின்னர் சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும் வந்தது. இவன், "இந்தா, வந்துட்டயா?" என்று தடியை ஓங்கினான். சிறிது சினத்துடன்; நாய் ஓடிவிட்டு மறுபடியும் வந்தது. நந்தனுக்குச் சினம் பொங்கிற்று; தடியைக் கொண்டு நாயைத் தாக்கினான். நாய் ஓட அதனைப் பின் தொடர்ந்து முன்னிலும் வேகமாய்த் தடியை வீசினான். மண்டையில் அடிபட்டு, நாய் உதிரத்தைக் கக்கிக்கொண்டு தரையில் சாய்ந்து இறந்தது. இது வீட்டில் வளர்க்கப் பெற்று வந்த நாய். இதனை வளர்த்து வந்தவன் மதுரை என்பவன், இதனைக் காணாமல் அங்கு மிங்கும் தேடிவந்தான். நாய் ஊளையிடும் சத்தத்தைக் கேட்டு இந்த இடத்திற்கு வந்து, நாயின் சடலம் உதிரப் புனலில் கிடப்பதையும் அதன் தலையில் அடிபட்டிருப்பதையுங் கண்டு பதைபதைத்து நாயைத் தன் கரங்களால் தடவிக்கொண்டு புலம்பினான். இவனது அழுகையைக் கேட்டு மக்கள் அங்குக் கூடினர். இவனோ கூட்டத்தையுங் கவனிக்காமல், "ஐயோ, எங்க வூட்டுலே பிறந்து என் மக்களைப்போல வளர்ந்த மாணிக்கத்தே பரிகொடுத்தேனே! என் உசிருபோலே காத்தேனே! அட மாணிக்கம்! நீ அடிபட்டுத்தானா சாகணும்? அடிச்சவன் இருந்தா இப்ப ஒருகை பார்க்கலாம்! ஐயோ—என் செல்லமே! இந்த கதியா ஒனக்கு நேரணும்?" என்று பலவாறு புலம்பிக் கொண்டிருந்தான். கூட்டத்திலுள்ள சிறு பையன் ஒருவன், "இல்லிங்க, அண்ணாச்சி, கோவில்லே வாசக்காரரு இல்லே, அவரு ஓடிவந்து அடிச்சாரு" என்றான்.

"நந்தனா அடிச்சான்? அவனைச் சும்மா வுடருதில்லை!" என்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான் மதுரை. கூட்டத்தினரில் சிலர், இவனைச் சாந்தப்படுத்தியும் பயனில்லை; இவன் இவர்களது கட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு கோயில் வாசலை நோக்கிப் பாய்ந்தான். அங்கு நின்று கொண்டிருந்த நந்தனது தலைக் குடுமியைப் பற்றி இழுத்து, "பொன்னு போல இருந்த நாயை நீதானடா கொன்னே? பழி தீத்துடறேன், பாரு" என்று கர்ஜித்தான். நந்தனோ மிகவும் முரடன். எனினும் சிறிது பணிவுடன், "மருதையண்ணே, கோச்சுகாதே. சொல்றதெ கேளு. கோவுலுக்குள்ளே போகப் பாத்துச்சு. மூணு தடவை தடுத்தேன். திரும்பித் திரும்பிப் பாஞ்சுது. துரத்தினேன்; கோவத்திலே தடி மேலே விழுந்தது. கோச்சுக்காதே, அண்ணே!" என்றான். இதெல்லாம் மதுரையின் காதில் விழவே இல்லை. அவன் கடுஞ் சினத்துடன் நந்தனைத் தாக்கினான். நந்தனும் அவனை நையப் புடைத்தான். கிளர்ந்தெழுந்த சீற்றத்தால் மதுரை இணையற்ற

ரேடியோவில் குரல்

"ராமு......என் ஆசை நிறைவேறிவிட்டது. நேற்று ரேடியோவில்என்குரல் வந்ததே!.........தெரியுமா உனக்கு?"

"அடப்பாவி...என்னிடம் சொல்லவேல்லியே... என்ன பாடினாய்?"

"பாட்டா...பூ...என் எஜமானர் நடித்த ஒரு அத்புத நாடகத்தில் உரக்க அழுது புலம்பும் பாகம் எனக்கு கொடுத்தார். போட்டு விளாசிவிட்டேன்"

வலிமை பெற்றான். நந்தனை ஒரே கட்டாகக் கட்டிக் கீழே வீழ்த்தி, முடக்கிய கையால் குத்தினான். நந்தனும் இறந்தான். இந்தச் சண்டையில் மிகவும் வாட்டமுற்றான் மதுரை. எனினும் ஆவேசத்துடன் நாய் கிடந்த இடத்திற்குச் சென்று, மறுபடியும் நாயைத் தடவிக் கொண்டு புலம்பிச் சிறிது நேரத்திற்கெல்லாம் உயிர் நீத்தான்.

இந்தச் செய்தி நகரம் முழுவதும் மின்னிலும் விரைவாகப் பரவியது. மக்கள் பலவாறு பேசிக் கொண்டனர். சிலர், "மதுரை நல்லவனாயிற்றே! அவனுக்கா இப்படிக் கோபம் வந்தது?" என்றனர். சிலர், "அந்த நாய் நல்லறிவு வாய்ந்தது; அவனை விட்டுப் பிரியாது. இன்று அவனைத் தேடித்தான் போயிருக்க வேண்டும்" என்றனர். வேறு சிலர், "நந்தன் செய்தது தப்பு; ஒரு ஜீவனை இப்படி அடித்திருக்கக் கூடாது" என்றனர்.

பெருமாள் இராக்காலம் கண்டருளும் வரையில் குற்றேவல்கள் புரிந்துவந்த ஆண்டான் சிறிது களைத்து, "பக்தவத்ஸலா!" என்று சொல்லிக் கொண்டே வெளியில் வந்தார், மக்கள் பலவகையாகப் பேசுவதைக் கேட்டு நிகழ்ந்தன யாவையும் உணர்ந்தார். கோபுர வாசல் வரையில் வந்தவர் சிறிது தயங்கிப் படிக்கட்டில் உட்கார்ந்தார். இதைக் கண்டு, அவருடன் நெருங்கிப் பழகுபவர் சிலரும் கூட உட்கார்ந்தனர். ஆண்டானது மெய் சிலிர்த்தது, கண்களில் நீர் மல்கியது. உடனிருந்தவர்கள், "ஆண்டான், என்ன இது?" என்றனர். ஆண்டானும், "நான் சிறிய ஞானத்தன்; எனினும் என் மனதில் ஓடும் எண்ணங்களைச் சொல்லுகிறேன். இந்த மதுரை படித்தவனல்லன்; இவன் செய்ய வேண்டுவன யாவை, செய்யத் தகாதன யாவை என்பனவற்றை அறியான். இவனது அபிமானத்தில் ஒதுங்கியது என்பதற்காக, தண்ணியதான இந்த நாயிடம் இவன் இவ்வளவு அன்பு கொண்டு, இது இறந்ததும் தான் உயிர் வாழமாட்டாமல் உயிர் நீத்தான் அல்லவா? நமக்கு நாயகன் ஒரு நற்சுற்றம், எனக்குயிர் ஒண்பொருள் வருநற் றொல்கதி யாகிய மைந்தன்'; ந த்யஜேயம் கதஞ்சந' என்றவாறு தன்னை அண்டினோரை விடாத மனப்பான்மையுற்றவன். அவன் எனக்கு ஸ்வாமி, நான் அவனது ஸ்வம்

(சொத்து); அவனது திருவடி நிழலில் நான் ஒதுங்கி நின்ருல், எல்லா நன்மைகளும் பெறலாம். விசேஷமான அறிவில்லாத இந்த மதுரை, ஒரு நாயினிடம் அன்புகாட்டித் தன்னை அழிய மாறினுன் எனில், அறிவாலும் ஆற்றலாலும் கருணையாலும் ஒப்புயர்வில்லாத பரம சேதனனுகிய இறைவனும் என்னிடம் அன்பு காட்டாமல் இருந்து விடுவானு? நான் என்னைக் காப்பாற்றிக் கொள்வது எதற்கு?'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். பின்பு “களிவண்டறையும் பொழில்'' என்று சொல்லப் பெற்ற சண்பகப் பிராகாரம் சென்று அங்கு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். கோயிலை வலஞ் செய்து வரும் அடியார்கள் இவர் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பதை கண்டு, அருகில் செல்லாமல் கையெடுத்துக் கும்பிடு செய்து போய்க் கொண்டிருந்தனர்.

திருவிழாவிற்குப் பிறகு விடாயாற்றி இரண்டு நாட்கள் நிகழ்ந்தது. மூன்ருவது நாள் காலஸந்தி ஆனதும் பட்டர், பக்தவத்ஸலனுக்குத் திருவாலவட்டம் பணிமாறிக் கொண்டிருந்தார். ஸந்நிதியில் என்றுமில்லாத ஒர் ஒளி திகழ்ந்தது; ஒளியால் மிக்க ஒருருவம் பெருமானை நோக்கி விரையக் கண்டார் பட்டர்; “ஸ்வாமீ, ஆண்டானு?'' என்ருர். அவ்வொளி பெருமானது திருவடிகளில் சேர்ந்து மறைந்தது. வியப்புடன் வெளியே வந்து பார்த்தார், பட்டர். இதற்குள் சிலர் ஓடிவந்து, ''ஐயோ, ஆண்டான்விண்ணுலகம்சேர்ந்தார்'' என்றனர். சிலர், “நேரன்று இரவு அர்த்த ஜாமத்திற்கு முன் இவர் அபிஷேகவல்லியார் ஸந்நிதியில் தண்டனிட்டு ‘நானும் அந்த நாயைப்போல் உடையவனது அபிமானம் பெறவேண்டும்' என்று சொல்லக் கேட்டோம். பின்பு களிவண்டறையும் பொழிலை நோக்கி விரைந்தார்; அங்கு யோகத்தில் அமர்ந்தார் என நினைக்கிருேம். அந்த இடத்தைவிட்டுச் சிறிதும் நகரவில்லை; தம்மையே மறந்து உட்கார்ந்திருந்தார்'' என்றனர்.

இந்த வரலாற்றினைப் பூருவாசாரியர்கள், ''உபாயத்துக்குப் பிராட்டியையும், (சீதையையும்) த்ரௌபதியையும், திருக்கண்ண மங்கை யாண்டானையும் போலே இருக்கவேண்டும்;...... பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள், த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள், திருக்கண்ணமங்கை யாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்'' என்று பொன்னிற் பொறித்ததுபோல் சுவடிகளில் குறித்து வைத்துள்ளனர். திருக்கண்ண மங்கை யாண்டானுக்காகத் தனியாக ஒரு ஸந்நிதி இப்போதும் திருக்கண்ண மங்கையிலுள்ளது. ❋

ஆலாப் பறக்குதே

''டேடே..நம் குடும்பம் ஆலாப்பறக்குதே.. இங்கே வந்து பாரேன்''

“ஐயோ......இதென்ன அசட்டு வார்த்தை?''

''இல்லை..அம்பி, நம்ப குரூப் போட்டோவைகாத் தாடி விடுகிருன். அதைச் சொன்னேன்''

கர்வ பங்கம்

வை. மு. விஜயலக்ஷ்மி

"சார்" என்றழைத்தபையன் மேஜைமீது ஒரு கவரை வைத்துவிட்டு, தள்ளு கதவைத் தாண்டிச்சென்று தன் ஆசனத்தில் அமர்ந்தான்.

மேஜை மீதுள்ள காகிதக் குவியலின் மத்தியில் தலையைக் கவிழ்த்து வேலையில் ஈடுபட்டிருந்தான் ரங்கநாதன். அவன் ஒரு என்ஜினியர்.

அவர்கள் கம்பனி விநியோகித்த தார் சரியாக இல்லை என்று செய்தி வந்திருப்பதால் உடனே சென்று அதை பரிசோதித்து, நிரூபிக்க வேண்டும் என்று அவனுக்கு ஆர்டர் வந்திருந்தது.

தன் ப்ரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டு, வழக்கப்படி கிளம்பினான். ஜீப் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது. குறிப்பிட்ட இடம் வந்ததும் தன்னோடு வந்தவர்களுடன் இறங்கினான். தான் ஒரு எஞ்ஜினியர் என்று முறைத்து நிற்காமல் தானே, தெருவில் ஒரு பாகத்தைக் கடப்பாரையால் குத்தத் தொடங்கினான்.

அப்போது ஓவர்ஸீயர் வந்து "ஏனப்பா! என்ஜினீயர் பின்னாலே வருகிறாரோ?" என்று வினவினார். ரங்கநாதன் அவர் முகத்தை நிமிர்ந்து நோக்கினான். அவனை 'சுரீர்' என்று ஏதோ ஒரு உணர்ச்சித் தாக்கியது. அவ்வுணர்ச்சியின் மத்தியில் வேறு ஒரு எண்ணமும் உதயமாகியது, அவனையன்றி ஒருவருக்கும் தெரியாது.

தன்னைச் சமாளித்துக் கொண்டு "நான் தான் என்ஜினியர்" என்றார்.

அம்மனிதர் "என்ன? நீயா" என்று உரக்கக் கூவியே விட்டார். அசடு வழியும் அவர் முகத்தில் ஆத்திரமும், பொருமையும் ஒன்றையொன்று போட்டி யிட்டவாறு எழும்பி மின்னுவதை ரங்கநாதன் நன்றாய் கவனித்தான். ஓவர்ஸியரால் நிற்கவும் முடியவில்லை. பலபேர் எதிரில் ஒன்றும் பேச மாட்டாது தவித்தார். தலையை கிறுகிறு வென்று சுற்றியது. என்ன செய்வதென்றறியாது தன்னையும் மறந்து அப்படியே கீழே அமர்ந்துவிட்டார். சுற்றியிருந்தவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் ரங்கநாதன் சளைக்காது தன் வேலையில் ஈடுபட்டான்.

முடிவில், "நம் கம்பெனி தாரின் மேல் ஒரு குற்றமும் இல்லை, அவர்கள் மட்டமான செலவில் காரியத்தை முடிக்க ஏதேதையோ போட்டு தெரு அமைத்தால் நல்ல தாராய் இருந்தாலும் எப்படி ஒட்டும்?" என்று கூறியதோடு, நேரிலும் நிரூபித்துக் காட்டி, விவரமாகப் படமும் போட்டு விளக்கி, எல்லோர் முன்னிலையிலும் ஓவர்ஸியரின் வண்டவாளத்தை வெட்ட வெளிச்சமாக்கி விட்-

டான். தன் வேலை முடிந்ததும், வந்தவர்களோடு ஜீப்பில் புறப்பட்டான்.

ஏறி உட்கார்ந்ததுதான் தாமதம். உடனே "ரங்கா! அந்த ஓவர்ஸீயர் உன்னிடம் முதலில் ஆதிகார தோரணையில் பேசினார். பிறகு நீ என்ஜினியர் என்று கூறியதும் அப்படியே உட்கார்ந்து விட்டார். அவர் முகமும் பேயறைந்தது போல் ஆகிவிட்டதே?" என்று எல்லோரும் ஏகக் குரலில் கேட்டு, பெரும் கூச்சலை எழுப்பியவாறு அவனைச்சூழ்ந்தனர். முதலில் பேசாமல் உட்கார்ந்திருந்த அவன் கடைசியில் தன் மனதிற்குள் ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவனாய்,தொண்டையைக் கனைத்தான்.

"இதைக் கேட்க உங்களுக்கெல்லாம் என்ன அப்படிப் பட்ட ஆவல்?" என்றான். "இல்லை ரங்கா...சொல்லதான் வேண்டும் நீ" என்றனர் அனைவரும் அவனை உலுக்கியவாறு.

அவன் சிந்தனைக் குதிரை கட்டுக் கடங்காமல் பல வருடங்களைத் தாண்டி பின்னோக்கி ஓடிக் கொண்டிருந்தது. அவன் வாயும் அந்நிகழ்ச்சிகளைக் கூறிய வண்ண மிருந்தன.

"எனக்கு அப்போது வயது பதினெட்டு இருக்கும். அச்சிறு வயதிலேயே ஒரு தங்கையையும், என் தாயாரையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை என் விதி என்னிடம் அளித்து விட்டது. ஏழ்மைச் சேற்றில் புதைந்திருந்தது என் குடும்பம். தவித்துத் தண்ணீராய் உருகிக் கொண்டிருந்தோம். படிக்கப் பணமில்லை. குடிக்கக் கூழில்லை. நிற்க நிழலில்லை. எலும்புக் கூடான எங்கள் உடல் தான் எங்களுக்குச் சொந்தம்.

அந்த நிலையில், தூரத்து உறவினர்தான்—மாமா முறை கொண்ட ஒரு வள்ளல் எங்களுக்குப் புகலிடம் அளித்தார். அந்த உத்தமரால் தான் நான் இன்று இந் நிலையில் இருக்கிறேன். அவர் உதவியால் அறைகுறையில் அறுந்திருந்த என் படிப்பு உருப்பெற்றது. பள்ளிப் படிப்பை முடித்துவிட்டேன் முக்கி நக்கி. அவரே ஒருவரிடம் என்னை வேலைக்கமர்த்தினார்.

இப்போது கூலியாட்கள், தெருவில் கல்லைச் சுமந்து, தாரைக் கொட்டி, வியர்வை பொங்க உழைக்கின்றார்களே அதே வேலைதான் அப்போது எனக்கு. காலை முதல் மாலை வரை வெய்யிலில் வாடவேண்டும். நான் சிறிது படித்திருப்பதால், அந்த ஓவர்ஸீயருக்கு வரும் கடிதங்களை பிரித்து வைப்பது. படித்துக் காட்டி பதில் எழுதுவது. இப்படிப் பட்ட வேலைகள் எட்டு மணி வரை சரியாய் விடும். என்னையும் அறியாமல் சிறிது நின்று விட்டால் அவருடைய வீட்டு வேலைகளுக்கு ஆள் நான்தான். அப்பாடா! என்று இரவு பத்து பதினேரு மணிக்குப் படுக்கச் சென்றாலும் 'அவசரமாக எஜமானர் அழைக்கிறார்' என்று பலநாள் தந்திபோல் ஆள் வந்து விடும்.

நான் போனது சாதாரண குமாஸ்தா வேலைக்கு. ஆனல் இவர்கள் நடத்துவது இப்படி.

காரணம்

முரடன்:-ஏய்! அந்தவெள்ளி விளக்கை மரியாதையாய் கொடு. இல்லை பிய்த்து விடுவேன்.

சாது:—(நடுங்கியவாறு) என்னப்பா பட்டம் பகலில் இப்படி மிரட்டி...வாங்குகிறாயே?

முரடன்:-பின்னே? ராவிலே தான் மூட்டைப் பூச்சியும், கொசுவும் செய்யற உபத்திரவத்திலே ஒருத்தரும் தூங்கறதில்லையே...ஹூம்...

ஆபீஸ் வேலைகளையும், இவர் வீட்டில் குழந்தைமுதல் கோட்டான் வரை இடும் வேலைகளைச் சளைக்காமல் செய்து ஓடாய்ப் போவதற்கு சம்பளம் 20 ரூபாய். என்ன அநியாயம். என்னைப் பையனாகவே அவர்கள் நினைக்கவில்லை. நானும் பொறுத்தேன் எல்லாவற்றையும். எதற்காக? வயிற்றுக்காக. என்னை ஆளாக்கிய மாமாவிடம் இதை ஒன்றையும் நான் கூறவில்லை, இத்தனை நாள் போதாது இனியும் பாரமாய் விளங்கக் கூடாது. அவர் மனதிற்கு கஷ்டம் கொடுக்கக் கூடாது என்று எண்ணியிருந்தேன்.

ஆனால், எல்லாம் நாம் நினைத்தபடி நடக்கிறதா? காற்று வாக்கில் என் மாமாவிற்கு விஷயம் எட்டி, என்னை அவ் வேலையிலிருந்து நிறுத்தி விட்டார். 'ஏழை' என்ற ஒரு மனோபாவத்தினால் என்னை அப்படிக் கொன்ற அந்த ஓவர்ஸியர் மேல் அடங்காத கோபம் கொண்டார். ஒரே பிடியில் நின்று இப்போது நாம் வேலை செய்யும் இதே கம்பனியில் சேர்த்தார்.

என் அனுபவத்தினால், பலரிடம் பலவிஷயங்களைக் கேட்டு அறிந்து, ஆராய்ந்து படிப்படியாக உயர்ந்த இந் நிலைக்கு வந்திருக்கிறேன். நான் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று இன்று எஞ்சினியராக மிளிரவில்லை. சலியா உழைப்பு, மேலதிகாரிகள் ஊட்டிய உற்சாகம், அளித்த சலுகைகளோடு, தூண்டில் போன்ற அனுபவமே என்னை இப்படிப் பிடித்திழுத்து நிறுத்தியிருக்கிறது. இவ் விஷயம் உங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும்.

என்னை அப்படிப் பாடுபடுத்திய அந்த ஓவர்ஸீயர் வேறு யாருமில்லை. இன்று நாம் எல்லோரும் கண்ட அதே நரஸிங்கராவ் தான். அவர் கீழ் கைக் கட்டி, வாய் பொத்தி கூழைக் கும்பிடு போட்டுக் கொண்டிருந்த ஒரு வேலைக்காரப் பயல், இன்று எஞ்சினியராக வந்து நம் தவறை நன்றாக எடுத்துரைத்து விட்டானே என்று எழுந்த எண்ணம்தான் ஆத்தி

ரத்தைக் கிளப்பி, அப்படிச் செய்து விட்டது. இத்தனை நாளாக தெரியாதிருந்த அநேக விஷயங்கள் நரஸிங்கராவால் தெரிந்துவிட்டது இல்லையா?' என்று கூறி நிறுத்தினான்.

"மிகவும் விறுவிறுப்பாக இருக்கிறதே உன் வாழ்க்கை. ரங்கா! அப்படியா விஷயம்?" என்று அதிசயித்தான் ஒருவன்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது அந்த ஒவர்ஸீயருக்குச் சரியாகி விட்டது". இப்படி ஒருவன் தத்துவம் பேசினான்.

"நண்பர்களே! நான் அந்த நரஸிங்கராவை பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று மனத்தில் கூட எண்ணியதில்லை. எதிர்பாராமல் அவரைச் சந்திப்பேன் என்றும் நினைக்கவில்லை. இன்று நேரடியாகப் பார்த்த பிறகும் கூட நான் பேசாது தான் இருந்தேன். இன்னும் கூட அந்த அகங்காரம் ஒழியாமல் 'பின்னால் வருகிறாரோ என்ஜினியர்' என்று அவன் ஏளனமாகக் கேட்டதும்தான் என் நெஞ்சில் என்னையறியாமல் ஆத்திரமும், உடலில் உணர்ச்சியும் பொங்கி, 'கடகட' வென்று அவனது லீலைகளை யெல்லாம் பலரெதிரில் உடைத்து விட்டு, க்ஷணம் நிற்காமல் வந்துவிட்டேன்" என்றான். இதைக் கூறும்போது அவன் மனம் நிறைந்திருந்தது.

அவனைச் சுற்றியிருந்த அனைவரும் "சபாஷ்! நன்றாக 'கர்வபங்கம்' செய்து விட்டாய். இப்படிப் பட்டவர்களைச் சும்மா விடக்கூடாது" என்று கோஷித்தனர். ஜீப்பும் கோஷத்துடன் காரியாலயத்தின் முகப்பில் போய் நின்றது. ★



மலடியா?

"தாத்தா! மலடிக்குக் கொழந்தெ பிறந்திருக்காம்"

"என்ன மலடிக்கா? யாருடா அவள்? எத்தனை வருஷமா கொழந்தெ இல்லே?"

"போ தாத்தா! இப்பதான் அவளுக்குக் கல்யாணம் ஆச்சு. நம்ம வேலைக்காரி தங்கத்தோட பொண்ணு மலையடிக்குப் பிறந்திருக்கு. அவளை வீட்டிலே மலடின்னு செல்லமா கூப்பிடுவா"

பாரதப் பூங்கா

வசுமதி ராமசுவாமி

★

பாரதக் கதைகளிலுள்ள அநேக விசேஷ அம்சங்களைப்பற்றிச் சொன்னேன். அதில் முக்கியமானது கதையின் சட்டதிட்டங்கள். ஒவ்வொரு பாத்திரத்திற்கேற்ப தோற்றம், முடிவு எல்லாம் அமைக்கப்பட்டிருக்கும்.

ஒரு பிறவி என்றால் அதற்கு முடிவு மறைவு நிச்சியம். எப்பேர்ப்பட்ட உயர்ந்த மகத்துவம் வாய்ந்த ஜன்மாகவாக இருந்தாலும், ஜனனத்தையும் மரணத்தையும் ஜெயிக்கமுடியாது. அகால மரணம்தான் மனதை உருக்குகிறதே தவிர, கால மரணத்தை மனம் ஏற்கிறது. முடிவுக்கு ஒரு காரணம் தேவை அல்லவா? க்ஷத்திரியர்கள் நோயின் காரணமாக இறக்கமாட்டார்கள். வீர மரணம்தான் அவர்களுக்கு ஏற்பட்டது. அவரவர்கள் அழிவிற்கு அவர்களே ஓரளவு காரணமாக இருக்கிறார்கள்.

பீஷ்மர் ஜிதேந்திரியன். உலகம் வியக்கும் சபதம் ஏற்று நடப்பவர். வீராதி வீரர். சகலமும் அறிந்தவர். அவரை ஜெயித்து வதம் செய்ய யாராலும் முடியாது. அவருக்கும் முடிவைச் செய்ய ஒரு சத்துரு வேண்டும். இவைகளெல்லாம் முன் கூட்டியே தெய்வநீதியில் ஏற்பாடு செய்யப்பட்டு விடுகிறது.

சத்தியவதிக்கு சித்திராங்கதன், விசித்திர வீர்யன் என இரண்டு பிள்ளைகள் பிறக்கின்றார்கள். சித்திராங்கதன் ஒரு யுத்தத்தில் அகால மரணமடைகிறான். அவனுடைய தம்பி விசித்திர வீர்யன் யுக்த வயது வரும் வரை பீஷ்மர் நாட்டின் காவலராக அரசுரிமையை நிர்வகித்து வருகிறார். சரியான வயதுவந்ததும் விசித்திர வீர்யன் பட்டத்திற்கு வருகிறான். பீஷ்மருக்கு சகல பொறுப்புகளுமிருக்கின்றன. எனவே விசித்திர வீர்யனுக்கு நல்ல கன்னிகையை மணமுடிக்க ஏற்பாடு செய்கிறார்.

பெண்ணுக்கு பிள்ளை கிடைப்பதுகூட ஒருவிதத்தில் சுலபம். ஆனால் நற்குணம் நற்செய்கையுள்ள நல்ல குலத்துப் பெண்பிள்ளைக்கு முக்கியமாகத் தேடவேண்டும். ஒரு பெண் தன் கணவன் எப்படி இருந்தாலும் அவனுக்கேற்ப நடந்துகொண்டு இல்லறத்தை சிறப்பிக்கச் செய்துவிடுவாள். நல்ல பெண்ணாக அமையாவிட்டால் ஒரு கணவனால் அப்படி ஒன்றும் செய்யமுடியாது.

காசிராஜன் பெண்களுக்கு சுயம்வரம் நடத்துவதாகச் செய்தி வந்தது. பீஷ்மர் விசித்திர வீர்யனுக்கு மணம் செய்துவைக்க சுயம்வரத்திற்குச் சென்றார். காசிராஜன் பெண்கள் மூவரும் சிறந்த பேரழகிகள். குணக் குன்றுகள். அரசகுமாரர்களுடைய போட்டி அதிகமாகவே இருந்தது. பீஷ்மரைக் கண்டு மற்ற இளவரசர்கள் ஏளனம் செய்தார்கள். கிழவர் உலகமறியப் பெரும் சபதம் செய்துவிட்டு சுயம்வரத்திற்கு வந்து தன் பெயரைக்

83217

கொடுத்திருக்கிறாரே என பேசிக் கொண்டார்கள். விசித்திர வீர்யனுக்காக அவர் வந்திருக்கிறாரென்று அவர்களுக்குத் தெரியாது.

சபாமண்டபத்தில் எல்லா நாட்டு இளவரசர்களும் வரிசையாக அமைக்கப்பட்ட ஆசனங்களில் உட்கார்ந்திருந்தார்கள். சின்னப் பெண்கள் கிழவரை லக்ஷியம் செய்வார்களா? பீஷ்மரைக் கடைக்கண்ணால் நோக்கி கேலியாகச் சிரித்துக்கொண்டு கிழவரை கடந்து நடந்தார்கள்.

பீஷ்மர் கோபம் கொண்டார். அரசர்கள் எல்லோரையும் க்ஷத்திரிய தர்மத்தின்படி யுத்தத்திற்கு அழைத்தார். தனுர் வித்தையில் அபார தேற்ச்சி பெற்றவரான பீஷ்மர் ஒருவராக இருந்துகொண்டு எல்லா அரசர்களையும் தோற்கடித்தார். மூன்று கன்னிகைகளையும் தேரில் ஏற்றிக்கொண்டு ஹஸ்தினாபுரத்திற்கு கிளம்பினார். வழியில் சௌபல நாட்டு மன்னன் பீஷ்மரை எதிர்த்தான். அவனையும் ஜெயித்து விட்டு தன் நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்.

விசித்திர வீர்யனுக்கு மூன்று பெண்களையும் மணமுடிக்க ஏற்பாடு செய்தார். அப்பொழுது மூத்த பெண் அம்பை "என் மனதில் சௌபல நாட்டு மன்னனை கணவனாக வரித்துவிட்டேன். ஒரு பெண் மனதால் வரித்தவனை மணப்பதுதான் முறையாகும். தர்மம் அறிந்த தாங்கள் சொல்வதைக் கேட்கிறேன்" என்றாள். பீஷ்மர் அம்பையின் மனதை உணர்ந்து சௌபல நாட்டுக்கு அம்பையை அனுப்புகிறார். அம்பிகை, அம்பாலிகை இருவரையும் விசித்திர வீர்யனுக்கு திருமணம் செய்துவைக்கிறார்.

அம்பை சௌபல மன்னனிடம் போய்ச் சேருகிறாள். பீஷ்மரால் ஜெயிக்கப்பட்ட உன்னை நான் ஏற்கமாட்டேன் என்று அம்பையை மன்னன் மறுக்கிறான். அம்பை திரும்பி பீஷ்மரிடம் வந்து அவரையே தன்னை மணக்கும்படி வேண்டுகிறாள். பீஷ்மர் தன் சபதத்தை மீற முடியாதென கண்டிப்பாகத் தெரிவிக்கிறார். அம்பை அவர் மனம் மாறுதா என்ற எண்ணத்தில் சில வருஷங்கள் பீஷ்மரின் அரண்மனையிலேயே இருக்கிறாள். சபலத்தினால் மறுபடியும் சௌபல மன்னனிடம் போய் வேண்டுகிறாள். அவனும் உறுதியாக மறுத்து விடுகிறான்.

கன்னிகை மனம் கலங்கி தவிக்கிறாள். முருகனை

தள்ளு

"எனக்கு முதல் தேதியிலேயிருந்து சாப்பாடு தள்ளி போச்சுப்பா"

"ஐயோ...... இப்போதே டாக்டரிடம் காட்டி உடம்பை கவனித்துக்கொள்"

"உடம்பா?...நீ ஒண்ணு. முதல் தேதி ஹாஸ்டலில் வேலை கிடைத்துவிட்டது. அங்கேயே என் சாப்பாடு நடந்துவிடுகிறது. வீட்டில் தள்ளிப் போச்சு என்கிறேன்"

புதுமை மணம்

"இதோ பாருப்பா.புதுமாதிரி யான கல்யாணம் நடக்கப்போ வுதாம்."

"எப்படி? பெண்ணுக்கும் பெண்ணுக்குமா? பிள்ளைக்கும் பிள்ளைக்குமா?"

"ஹ்ூம்..கல்யாணமானபிறகு பெண்ணும் பிள்ளையும் கல்யா ணம்பண்ணிக்கிட்டோம்னு பேப் பரிலே போடுவாங்களாம் அது ஒண்ணுதான் செலவாம்"

நினைத்து தவம் செய்கிருள். முருகன் தரிசனம் கிடைக் கிறது. வேலன் அவளிடம் ஒரு வாடாத தாமரை மலர் மாலையைக் கொடுத்து இதை அணிந்துகொண்டவரால் பீஷ் மருக்கு மரணம் ஏற்படுமென வரம் அருளுகிருர். மாலையை அணிந்துகொண்டு பீஷ்மரை வதம் செய்யும்படி ஒவ்வொரு அரசனையும் வேண்டுகிருள். எல்லோரும் பீஷ்மருடைய விரோதத்திற்கு பயந்து மறுத்து விடுகிருர்கள். அம்பை மனம் வெறுத்து மாலையை துருபத ராஜனு டைய அரண்மனை வாயிலில் மாட்டிவிடுகிருள்.

மீண்டும் மலைச்சாரலில் அமர்ந்து பரமசிவனைக்குறித்து கோர தவம் செய்கிருள். ஈச் வரன் தோன்றுகிருர். அவ மானத்தினல் மனம் கொதித் திருக்கும் அந்த பேதைப் பெண் பீஷ்மரை கொல்லும் வரனையே வேண்டினுள். பரம சிவன் மறு பிறவியில் உன் கையாலேயே பீஷ்மரைக் கொல்லுவாயென வரம் கொடுக்கிருர்.

இயற்கையான மரணத்திற் காக அம்பை காத்திருக்க வில்லை. அக்கினி பிரவேசம் செய்துவிடுகிருள். மறு பிறவி யில் துருபதராஜன் மகளாகப் பிறக்கிருள். சிறுமியாக இருக் கும்போதே யாரும் தீண்ட பயந்த வாடா மாலையை கழுத் தில் அணிந்துகொண்டாள். அரசன் நடுநடுங்கிருன். தனக்கு அழிவு வந்துவிடுமோ என பயந்து பெண்ணை வெளியே அனுப்பிவிடுகிருன்.

ராஜகுமாரி காட்டில் கடும் தவம் புரிந்து சிகண்டி என்னும் வீரனுக—ஆணுக மாறிவிடு கிருள். பாரதப் போரில் சிகண் டியால்தான் பீஷ்மர் மரண மடைகிருர். பீஷ்மராக இருந் தாலும் ஒரு பெண்ணின் சாபம் விடவில்லை.

அம்பை பீஷ்மரிடமும், சௌபல அரசனிடமும், அலைந்து மனம் கொதித்து பீஷ்மரைக் கொல்லுமளவு ஆத் திரமடைகிருள். ஒருவருடைய மனதை மற்றொருவர் துன் புறுத்தலே துன்புற்றவர் களுக்கு சாபமிடவும், ஆத்திர மடையவும் இயற்கையாகவே சக்தி ஏற்பட்டுவிடுகிறது.

பாரதப் போர் என்ற மகத் தான அழிவிற்கு பிரதான காரணத்திற்கு அறுகுணமாக இம் மாதிரி அநேக கார ணங்கள் சங்கிலித்தொடராக பின்னப்பட்டிருக்கின்றன.

கடல் கொந்தளித்து பொங்கு கிறது. அவ்வளவு நீரும், அநேக நதிகளின் சேர்க்கை யால்தான் கடலாகிறது.

★ சொல்லட்டுமா! ★

ஹாஸ்ய நடிகர் ஸ்ரீ L. நாராயணராவ்

★

ஒரு அக்கா, ஒரு தங்கை மூன்று தம்பிகளோடு நான் பிறந்தவன். மற்ற நால்வரைப்பற்றிநான் சொல்வதற்கு ஒன்றுமே யில்லை. ஆனால் பத்திரகாளி, பச்சைளகாய், ருக்திராதேவி என்றெல்லாம் என்னிடம்பட்டம் பெற்ற என் அருமைத் தங்கையைப் பற்றி நான் சொல்லாமல் இருக்க முடியுமா? வீட்டில் சதாசர்வதா சண்டையையும், பூசலையும் தவிர அன்பு கொஞ்சல் என்பதை அறியவே மாட்டோம். நெருப்பும் காற்றும் சேர்ந்தால் தீப்பிடித்துக்கொள்ளும் என்பார்கள் பெரியோர்கள். என் தங்கையும் நானும் பார்த்துவிட்டாலே சண்டைத் தீ ஆகாயத்தை அளாவிவிடும். அதனுடைய பலன் எங்களிருவர் உடம்பிலும் அடியின் தழும்புகளும், கிள்ளின காயங்களும் ப்ரகாசிக்கும்.



என்ன இருந்தாலும் என்னைவிட அவள் சிறியவளல்லவா? அதுவும் பெண்ணல்லவா? எங்கள் சண்டை ஆரம்பிக்கும் போதே, அவளுடைய பீரங்கி த்வனி, பயங்கரக் கூக்குரலை எழுப்பிவிடும். 'அம்மா! பாட்டி! இங்கே வாருங்களேன். தேவு என்னைக்கொன்னுட்டான். கொலை பண்ணிட்டான். செத்தேன்'' என்று கூச்சமின்றி கத்துவாள். ஆனால் எனக்குக் கத்துவதென்றால் ரொம்ப வெட்கம். பார்க்கப்போனால் சண்டைக்குக் காரணம் ஒன்றுமே இருக்காது. அவள் பிறவியிலேயே விஷமக்காரி. அதிலும் என்னிடத்தில் அன்புக்கு பதில் ஆத்திரமே கொண்டவள். நான் மட்டுமென்ன அப்படித்தான். வீட்டில் ஏதாவது தின்பண்டங்கள் கொடுத்தால், எனக்கு நிறையவும், தனக்குக் குறையவும் கொடுத்துவிட்டதாக நினைத்து, ''அட பாவி! நீ நிறைய வாங்கிக் கொண்டு விட்டாயே. உன் வயிறு வெடிக்க. உன் வாய் கிழிய''

என்று தொடங்கி அதற்கு ஒரு சண்டை. என்னுடைய சொக்காய், துணி இவை தோய்த்து உலர்த்தியிருந்தால் வேண்டுமென்று, கையையும் முகத்தையும் துடைப்பது, சுருட்டி மூலையில் வீசி எறிவது, இப்படி ஒரு சண்டை. நான் படிப்பதுதான் அழகாயிற்றே. என் புத்தகத்தை எடுத்து கிழிப்பது, ஒளித்துவைப்பது, மேலும் நான் படுக்கும் இடத்தில் தண்ணீரைக் கொட்டுவது, என் படுக்கையை மிதித்து நாசம் செய்வது, இப்படி வேறு கிளறுவாள். சண்டையில் எழும் இவள் கூச்சலைக் கேட்டு, என் பாட்டியோ, அம்மாவோ அலறியவாறு ஓடிவருவார்கள். சும்மாவா. விரட்டியை பின்புறம் ஒளித்தவாறுதான் வருவார்கள். 'அடோய், நமக்கு விரட்டியடி கிடைக்கப் போகிறது' என்று அவர்கள் கைகள் பின்புறம் போயிருப்பதிலேயே அறிந்து கொண்டுவிடுவேன். நிற்பேனா? ஒரே ஓட்டம். மின்னல் வேகத்தில் மறைந்து விடுவேன்.

அன்று காலையிலும் ஒரு ப்ரமாத வேடிக்கைச் சண்டை நடந்தது. அதாவது, எண்ணைத் தேய்த்து குளிப்பதென்றாலே என் தங்கைக்குப் பெரிய அழுகை. என் தாயாரை வதைத்துவிடுவாள். அன்று ஏதோ ஒரு பண்டிகையுடன், வெள்ளிக்கிழமையும் சேர்ந்த நாள். என் தாயாரே, அவளை மிரட்டி உதைத்து எண்ணைத் தேய்த்துவிட்டாள். இவள் செய்த ரகளையினால், ஏற்பட்ட ஆத்திரத்தில் குடம் குடமாகவே தண்ணீரை மொண்டுக் கொட்டினாள். குளித்து முடித்தும் அவள் ஒப்பாரி ஓயவில்லை. இதையெல்லாம் ஒரு மூலையில் நின்றவாறு நான் கவனித்துக் கொண்டிருந்தேன். அவள் அழுகை ஓய என் அம்மா பேரீச்சம் பழத்தைக் கொண்டு கொடுத்தாள். நான் சும்மா இருப்பேனா? கேட்கவும் முடியாது, என் ஆத்திரம் தீர. "காளியம்மாளுக்கு எண்ணைத் தேய்த்து, குடத்துடன் தண்ணியை மொண்டு கொட்டி, பேரீச்சம் பழம் நெய்வேத்யம் செய்து காளியம்மாளுக்கு படையல் போட்டா" என்று கும்மிமெட்டில் தாளம் தட்டிக்கொண்டு உரக்கப் பாடினேன்.

அடேயப்பா! காளி என்றால் வெறும் காளியா? வீராக்காளி, பத்ர காளி, சூருக்காளி, எல்லா காளி உருவமும் எடுத்து, பெரிய கழியுடன் என்னை அடிக்க ஓடிவந்தாள். நானா அவள் கையில் அகப்படுவேன். காத்தாடி போல்தான் ஓடினேன். எதிரே வந்த என் தம்பியின்மீது முட்டி மோதி, அவனையும் தள்ளி, நானும் விழுந்தேன். இதைக் கண்டே த்ருப்தி அடைந்து கைத்தட்டி உரக்கச் சிரித்தாள். பிறகும் அடிக்க ஓடிவந்தாள். ஒரு பெரிய யுத்தத்தை முடித்து கொண்டுதான் நான் வெளியே வந்தேன். என்னை இப்படி ஆட்டிவைக்கும், காளியோடு பாட்டியும் வரவே, தெருவிலேயே ரகளை நடக்குமோ, வீட்டிற்குச் சென்றால் என்ன நேருமோ என்று நடுங்கிதான் டவுல் ராமுவின் பின் ஒளிந்து கொண்டேன்.

நான் இருப்பது தெரிந்தோ தெரியாமலோ "என்ன ராமு

சௌக்கியமா?'' என்று கேட்டாள். என் பாட்டியின் குரல் அருகில் வரவர என் மண்டையிலும், மார்பிலும் அடிப்பது போலிருந்தது.

''சௌக்கியந்தாம்மா. வீட்டிலே எல்லோரும் சுகமா?'' என்று பதில் விசாரணை நடத்திவிட்டு என் பாட்டி சற்று நகர்ந்ததும் என்னை மறைத்து அழைத்துக் கொண்டு நடந்தான். 'அப்படா பிழைத்தோம்' என்று எண்ணுவதற்குள் ''பாட்டி! அதோ தேவு போருன்'' என்று என் தங்கை கூவினுள். அந்தக் குரலைக்கேட்டதும் எல்லோரும் தட்டாமாலை சுற்றுவது போலிருந்தது. உடனே என் பாட்டி ''ஏண்டா தேவு? இங்கெங்கே திரிகிருய்? எழுத வேண்டாமா, படிக்க வேண்டாமா? சின்ன வயதில் இப்படி சுற்றுகிருயே, புத்தியில்லை'' என்று என்னிடமும், ''ஏண்டாப்பா ராமு! நீயாவது கொஞ்சம் புத்தி சொல்லி, அவனை படிக்கச் சொல்லுப்பா'' என்று தன் குறையைக் கூறிக் கொண்டாள். நான் தலை குனிந்து கைக் கட்டி, வாய் பொத்தி நிஷ்டையில் இருப்பவன் போல் நின்றிருந்தேன்.

''தேவு நல்ல பையன். கெட்டிக்காரனம்மா. குழந்தையை கோவிக்காதீங்கோ. அவன் நல்லா பாடருன். சங்கீத ஞானமும் இருக்குது. அங்கே ஒரு கச்சேரி நடக்குது. அதுக்கு நான்தான் கூட்டிப் போறேன்'' என்றவாறு திரும்பிப் பார்க்காமல் என்னேடு நடந்தே விட்டான்.

சிலநாள் கழித்து ராமுவே என் அப்பாவிடம் வந்து ''தாஸரே! தேவுவிற்கு படிப்பில் மூளை ஓடவில்லை. வாராத விஷயத்தில் அவனைத் தள்ளி ஹிம்சை செய்வதைவிட, அவனுக்கு ஆசையிருக்கும் சங்கீதத்தில் முன்னுக்குக் கொண்டு வரலாம். உங்களுக்கும் பின்னலே பாட உபயோகமாய் இருக்கும். வேறு யாரும் வேண்டாம். நானே இலவசமா சொல்லித் தரேன். இவன் பஜனை, மேளம், கச்சேரி நடக்கிற இடங்களில் கட்டாயம் இருக்கிருன். அனுப்புங்க தாஸரே'' என்று கேட்டு அனுமதியும் பெற்றுவிட்டான்.

அன்றிலிருந்து நான் சங்கீதம் பயிலத் தொடங்கி விட்டேன். பாடம் படிப்பதற்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டாலும் பலகை புத்தகம், சகிதம் பள்ளி செல்வதை மட்டும் நிறுத்தவில்லை.

அதிகாலையில் குளிரில் நடுங்கிக் கொண்டே ராமுவின் விட்டிற்கு ஓடுவேன். என்னேடு ஒரு பெண்ணும் பாட்டு கற்றுக் கொள்ள வருவாள். ''தேவு! நீங்க ரெண்டு பேரும் சாதகம் பண்ணுங்க'' என்று சொல்லி விட்டு, மறு தூக்கம் போடத் தொடங்குவார் ராமு.

நானும், அந்தப் பெண்ணும், குளிரின் வேகத்தில் ''ஸஸஸஸ.........ரிரிரிரி......... கககக...'' என்று அலறிக்கொண்டிருப்போம். இந்த சமயம் எனக்கு இன்னொரு விஷயங் கூட நினைவுக்கு வருகிறது. அதாவது ஹரிகதை செய்யும் பாகவதர்கள் நந்தனர் சரித்திரத்தில், ''சிவசிவசிவசிவ'' என்று மார்கழி மாதக் குளிரில் நீராடிநீரணிந்து பக்தியாக உச்சரிப்பார்கள். குளிரும் சிவ நாமமும் சேர்ந்து வவ்வ கொட்டுவது போலிருக்கும்'' என்று சொல்

லுவார்கள். அதைப்போல் மார்கழி மாதக் குளிறில் நாங்கள் குளறியது தெய்வங்களின் பெயராக இருந்தால் எத்தனையோ புண்ணியமுண்டாகியிருக்கும். ஸஸ்ஸஸஸ்ஸ...என்று ஸப்த ஸ்வரங்களாகிய அலையில் புரண்டுகொண்டிருக்கையில் பொழுது விடியும் காலமாகிவிடும்.

அந்த ஊரில் ஒரு பஜனை கோயில் உண்டு. அவர்கள் அதிகாலையில் பஜனை செய்து கொண்டு வரும் நாம சப்தமும் ஜால்ரா கொட்டும் காதில் கேட்டதும் ஒரே ஓட்டமாக அதில் தாவிச்சென்று ஹரிநாம கீர்த்தனங்களைப் பாட ஆரம்பித்து விடுவேன். பாடுவதிலுள்ள ருசியும் ஆர்வமும் படிப்பு என்கிற பதத்திற்கு எட்டியே பார்க்கவில்லை. இப்படியாக சங்கீதம் ஓரளவு வ்ருத்தியாகியது.

எங்கள் க்ராமத்தில் தெருக் கூத்துப் போடுவார்கள். அந்த நாடகத்திலும் நான் தான் முதல் வரிசையில் இருப்பேன். நாடகத்தில் விதூஷகன் என்ற பெயரில் ஒருவன் கோணமாண உடையணிந்து கொண்டு வந்து தாவிக் குதிப்பதும் தாளம் போடுவதும் கீழ்த் தரமாகப் பேசுவதும் இதைக் கேட்டு ஜனங்கள் பரமாநந்தமடைவதும் எனக்குப் புதுமையிலும் புதுமையாக இருக்கும். அதோடு விட்டதா! அந்த மாதிரி விதூஷகனை நாமும் ஏன் பாடிஆடி நடிக்கக்கூடாது என்றஆசைசிறுவிதைப்போல் மனத்தில் விழுந்துவிட்டது.

இதற்கிடையில் என் பிதா சென்னைக்கு தமது பாண்டித்ய விஷயமாகச் செல்லுகையில் என்னையும் அழைத்துச் சென்றார். சென்ற இடம் சாமான்யமானதா? ஒரு பெரிய திவான் வீடாகும். அங்கு எங்களுக்கு நடக்கும் மரியாதைகளும் உபசரிப்புகளும் சொல்லி முடியாது. அப்போது நாடக உலகத்தில் மிக்க ப்ரக்யாதியுடன் விளங்கிய பாலாமணி அம்மையார் நாடகம் சென்னையில் நடந்துகொண்டிருந்தது. திவான் வீட்டிலும் எனக்கு இரண்டு சகாக்கள் கிடைத்தார்கள். அவர்களுடன் நாடகம் பார்த்துவிட்டு வந்த வேகத்தில் எனது ஆசை விதை துளிர்க்க வாரம்பித்தது. ஆனால் நாடகம் போவதே பெரியவர்களுக்குத் தெரியக் கூடாத நிலையில் நான் இருக்கையில் எனது ஆசையை யாரிடம் கூறமுடியும்? உள்ளுக் குள்ளேயே அடக்கி வைத்துக் கொண்டிருந்தேன்.

மயிலாப்பூரில் ஒரு பெரிய தனிகர் வீட்டில் கல்யாணம் நடந்தது. தற்கால ஹரிகதா உலகில் மிக்கப் புகழுடன் சிகரஸ்தானத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமதி C. ஸரஸ்வதிபாய் அவர்களின் ஹரிகதை அந்த கல்யாணத்தில் நடந்தது. கூட்டமோ எள்ளு போட்டால் விழாது. எனக்குக் கதை கேட்கவேண்டுமென்கிற ஆசை ப்ரமாதமாய் எழுந்ததால் நானே முந்திரிக்கொட்டையைப் போல் முந்தியடித்துக் கொண்டுச் சென்று உட்கார்ந்து விட்டேன்.

அப்போது மணி ஆறு இருக்கும். ஹரிகதையோ அபாரமாயிருக்கிறது, செய்யும் அம்மாவுக்கு 15 வயதுக்குள் தானிருக்கும் கேட்கும் ஜனங்கள் தம்மை

மறந்து ஆநந்தத்துடன் ஹா ஹா என்று ஆர்ப்பரித்தார்கள். அந்த அம்மாளின் சங்கீதமும் வாக்கு சுத்தமும் சிறிய வனாகிய என்னையே கவர்ந்தது என்றால் பெரியவர்களுக்குக் கேட்கவேணுமா?

ஸ்வாரஸ்யமாய்க் கதை நடக்கும்போது சதஸ்ஸில் ஒரே பரபரப்பும் ஆரவாரமும் உண்டாகியது. பத்து பனிரெண்டு வயது கூட நிரம்பாத எனக்கு இந்த விவரம் தெரியாமல் வாசல் புரமே நோக்கினேன். அடாடாடா! இனிமேல் கேட்கவா வேண்டும். நாடக உலகத்தில் நிகரிலாது புகழுடன் விளங்கும் பாலாமணி அம்மாள் அந்தக் கல்யாணத்திற்கு வந்திருப்பதுதான் அந்த ஆரவாரத்திற்குக் காரணம். இந்த விஷயம் தெரிந்ததுதான் தாமதம். நானும் நாடகத்தில் வேஷமணிந்திருக்கையில் பார்த்த பாலாமணியம்மாளை சாதாரண ஒரு குடும்பத்து மாது போன்ற நிலையில் பார்க்கையில் எனக்கு ஏற்பட்ட ஒரு அதிசயம், ஆச்சரியம், மகிழ்ச்சி, அடேயப்பா! சொல்லமுடியாது. சொர்க்கபதவியே கிட்டிவிட்டது போன்ற உணர்ச்சியுடன் "பாலாமணி பாலாமணி," என்று எல்லோரும் சொல்லுவது போல் நானும் சொல்லியபடி இன்னும் நெருக்கியடித்துக் கொண்டு அந்த அம்மாளின் சமீபத்தில் போய் உட்கார்ந்து விட்டேன். சில நிமிஷங்கள் மட்டும் அந்த அம்மாள் இருந்துவிட்டு உடனே போய்விட்டார்கள். அந்த அம்மாள் வந்து செல்லும் வரையில் அங்குண்டாகிய கலகலப்புக்கு அளவிட்டே சொல்ல முடியாது. இன்னும் கேட்கப்போனால் கூட்டத்தில் சிலர் அந்தம்மாளின் பின்னோடு பின்னழகைப் பார்த்தபடியே சென்றுவிட்டு மறுபடி உள்ளே வரக்கூட முடியாமல் தவித்தார்கள். நான் கதை கேட்கும் ஆவலில் இருந்த இடத்திலேயே இருந்துவிட்டேன்.

ஸ்ரீ ஸரஸ்வதிபாய் அம்மாளின் கதை அமைந்த அழகில் அந்த ஸ்வாரஸ்யத்தில் மூழ்கிப் போய் நேரம் போவதைக்கூட மறந்துவிட்டேன். வீட்டு நினைவே இல்லை. அதிலும் அன்னிய ஊரில் அந்நியர் வீட்டிலிருப்பதைக்கூட மறந்தேன்.

அருகிலிருந்த ஒருவர் "மணி பத்தடித்து விட்டது. இனி வீட்டுக்குப் போகவேண்டியது தான்" என்று சொல்லியபோது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்னைத் தேடுகிறார்களோ! வீட்டுக்குப் போனால் தகப்பனாரிடம் என்ன கிடைக்குமோ! என்கிற பயம் என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டதால் அதுவரையில் இல்லாத ஒரு நடுக்கத்துடன் எழுந்தேன்.

கிழக்கு வெளுத்தது



3

முயற்சியில் அதிர்ச்சி

எந்த ஒரு அதிர்ச்சிகரமான விஷயத்தைப் பார்த்தாலும், கேட்டாலும் மின்ஸாரம் தாக்கி வதைப்பது போன்ற உணர்ச்சி உண்டாகித் திக்குமுக்காடச் செய்துவிடுவது உலக இயல்பு. அதிலும் தனக்கே முற்றிலும் சம்மந்தப்பட்ட விஷயமாகிவிட்டாலோ அதன் அவஸ்தைகளைச் சொல்லிமுடியாது. அந்த நிலையில் பாஸ்கரன் இன்னதென்று விவரிக்க முடியாத விதம் தாக்குண்டு தீயை மிதித்தவன் போல நின்றவன் சில விநாடிகள் சென்ற பிறகே சிறிது உணர்வு பெற்றான். நேரே உள்ளேயே சென்று தாயாரையும் தமையனையும் விசாரித்துவிடலாமா? என்றும் நினைத்தான். ஆனால் அம்மாதிரி செய்வதால் அவர்களுடைய உண்மையான நோக்கத்தையும் அறியமுடியாது. காரியமும் சிதறிவிடும் என்ற முன்யோசனை தோன்றியதும் தன்னைத்தான் வெகு ச்ரமப்பட்டுச் சமாளித்துக்கொண்ட சமயம் பரிதாப பிம்பம்போன்ற பூமாவைப் பார்த்ததும் இவன் மனம் இளகிவிட்டது.

தான் வந்த ஜாடையே தெரியாமல் விடுவிடு என்று போய்விட வேண்டும். பரிசுகளைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்து நடையை வெகு வேகமாக ஓட்டினான். அவன் இதயத்தில் அண்ணனுக்கு என்மீது த்வேஷமா?.........அப்பாவின் ஆதி ரகஸ்யமா?........என்கிற

இரண்டு எண்ணங்களாகிய பாணம் மாரி மாரிக் குத்தித் துளைத்துக்கொண்டே இருந்ததால் முதலில் கிளம்பிய உத்ஸாகம் குன்றிவிட்டது. எனினும் தனது மாறுதல்களை எல்லாம் அடக்கிக்கொண்டு முதலில் தனது ஆப்தமித்திரன் ராமுவின் வீட்டிற்கேச் சென்றான்.

ராமுவின் பிதா காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தினசரி பத்திரிகையைப் படிப்பதில் ஆழ்ந்திருந்தார். பாஸ்கரன் வழக்கப்படியான நகைமுகத்துடன் "மாமா! சௌக்கியமா!" என்று கேட்டுக்கொண்டே நமஸ்காரமும் செய்தான்.

ராமுவின் பிதாவாகிய சாம்புமாமா மிக்க ஆச்சரியமும் பூரிப்புமடைந்து, "அடாடா! பாஸ்கரனு! எப்போ வந்தாய்? சவுக்யமா! இன்றுதான் உன்னைப்பற்றி மாமியும் நானும் காலையில் பேசிக்கொண்டிருந்தோம். சொல்லி வைத்ததுபோல் நீயும் வந்தாயே! எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. சென்றது போக இன்னும் நூறு ஆயிசு நீ நன்றாக இருக்கவேண்டும். இந்தா! ஸ்வாமிக்கு நைவேத்யம் செய்த பழம்" என்று உள்ளே அழைத்துச்சென்று அன்பொழுக அவனிடம் கொடுத்தார்.

கர்வமோ! பெருமையோ! எதுவுமே இல்லாத பாஸ்கரன் பெரியவரை வணங்கிவிட்டுப் பழத்தை வாங்கித் தின்றபடியே, "மாமா! ராமு கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறானு? அங்கு சவுக்யமாக வசதிகளுடன் இருக்கிறதா!" என்று கேட்டான். சந்தோஷ மிகுதியால் கிழவர் பல்லை இளித்துக்கொண்டே "அடியே! இன்று காலையில்தானே பாஸ்கரனைப்பற்றிப் பேசினுய். அதோ அவனே வந்து விட்டான். வா, வா!" என்று கூப்பிட்டார்.

வேலை செய்யும் கோலத்துடன் பரம சந்தோஷமாக மாமி வந்து பாஸ்கரனிடம் ப்ரமாதமாகப் பேசி வாழ்த்தி விட்டு, "பாஸ்கரா! இன்று எதற்காக உன்னை நினைத்தேன் தெரியுமோ? உன் ஆருயிர் நேசன் கல்கத்தாவில் சவுகரியமே இல்லாத நிலையில் ஓட்டலில் சாப்பிட்டுக்கொண்டுத் திண்டாடுகிறான். நாங்கள் எத்தனை எழுதியும் கல்யாணத்திற்கு இசையவே மாட்டேன் என்று பிடிவாதம் செய்வதால் உன்னை விட்டாவது ஒரு கடிதம் எழுதச்செய்து அவனுக்குப் புத்தி போதிக்க வேண்டும் என்று நினைத்துத் தான் பேசினோம். தெய்வச் செயலாய் நீயே வந்துவிட்டாய். ராமுவுக்கு ஒரு கடிதம் எழுதுகிறாயாப்பா!" என்று தனது

தாயுள்ளத்தின் துடிதுடிப்பை அப்படியே எடுத்துக் காட்டினுள்.

பாஸ்கரன் பதிலே பேசாமல் சிரித்தான்.

சாம்பு :—ஏண்டாப்பா! சிரிக்கிருய்! கல்யாணம் என்ருல் சிரிப்பாக இருக்கிறதா! உன் விஷயத்திலும் இப்படியே தான் உன் பெற்ருேர்கள் கவலைப்படுகிருர்கள் என்பது தெரியும். இருப்பினும் நீ சொன்னல் அவன் கட்டாயம கேட்பான் என்கிற நம்பிக்கை இருக்கிறது. அதனல் சொன்னேம்.

மாமி :—இதோ பாரு பாஸ்கரா! அந்த காலத்தில் இந்த மாதிரி படிப்புகளும் ஊரைவிட்டு ஊர் டேரா தூக்குவதும் அதிகம் கிடையாது மேல் நாட்டுப் படிப்பு என்கிற பர பரப்பு இப்போது காற்றுபோல் உலகைச் சூழ்ந்து கொண்டு விட்டது பாரு. இந்த தொல்லையும் அப்போது அதிகமில்லை. எங்கோ ஒருவர், இருவர் போவார்கள். அதில் சிலர் சீலத்துடன் திரும்புவார்கள். சிலர் அழகான ஒரு குச்சு நாயையும் வெள்ளைக்காரப் பெண்ணையும் இழுத் துக்கொண்டு வருவார்கள். சில புண்ணியவான்களோ: நம் தாய் நாட்டையும் பெற்ருேர், உற்ருேர் மக்கள் மனிதர்கள் முதலிய பாசங்களையும் அறவே அறுத்துத் துறவிபோ லாகி—ஆனல் வெள்ளை மாதிற்கு அடிமையாகி அங்கேயே ஸ்திர லக்கினத்தில் சென்றதுபோல் தங்கிவிடுவார்கள். இத்தகைய காட்சிகளைத்தான் அக்காலத்தில் பார்த்தோம். ஏன்! உனக்குத் தெரியுமோ தெரியாதோ! என்னுடைய சிறிய தாயாரின் மகன் மேல் படிப்புக்காக லண்டன் சென் றவன் இன்று வரையில் திரும்பவே இல்லை. தான் ஒரு மகனைப் பெறவே இல்லை என்று மனங்கொதித்து உயிர் துறந்தார்கள் பெற்ருேர்கள். அந்தமாதிரி கதி இக்காலத் தில் நாடுவிட்டு நாடு செல்லாமலேயே வந்துவிடுகிறதே பாஸ்கரா!''

பாஸ்கரனுக்கு இந்த அனுபவம் வாய்ந்த ஆழமான வார்த்தைகள் உண்மையில் மனத்தில் நன்ருகப் பதிந்த தால் கவனித்துக் கேட்கலானுன். தன் ப்ரஸங்கத்தை மாமி நிறுத்தவில்லை. மீண்டும் தொடர்ந்தாள். “பாஸ்கரா! நான் ஏதோ உளறுவதாக நினைத்தாலும் சரி. அல்லது பயித்திய மென்றே எண்ணி பரிகஸித்தாலும் சரி! பெத்த உள்ளத்தின் பாசமும் துடிப்பும் நீ அறியமாட்டாயல்லவா! எத்தனை பிள்ளைகள் இம்மாதிரி உயர்ந்த படிப்புகள் படித்துவிட்டு இந்தியாவின் எல்லைக்கோடி வரையிலான

ஊர்களில் தனித்து உத்யோகத்திற்குச் சென்றுவிட்டனர். அவர்களில் எத்தனை பேர்கள் அந்தந்த ஊரில் கிடைத்த பார்ஸி பெண்கள், சட்டைக்காரப் பெண்கள் இன்னும் எத்தனையோ ஜாதிப் பெண்களை பாழும் ரிஜிஸ்தர் என்கிற பெயரில் மணந்துகொண்டு பெற்றோர்களின் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறார்கள். இவைகளை எல்லாம் கேட்கக் கேட்கத்தான் நான் தவிக்கிறேன். நீ எப்படியாவது பெரியமனது செய்து அவனை ஒரு மாதம் லீவு வாங்கிக்கொண்டு வரச்சொல்லு. நல்ல சம்பந்தமாகப் பார்த்துக் கல்யாணத்தைச் செய்து குடும்பத்துடன் கொண்டு விட்டுவிட்டு வருகிறேன்....ஏம்பா! நானும் அப்போதுமுதல் க்ராமபோன் போன்று மூச்சுவிடாமல் பேசுகிறேன்; நீ வாயே திறக்காமல் ஊமைபோலிருக்கிறாயே. இதென்ன ஸாதனை ?" என்று கிளறிவிட்டுக் கேட்டாள்.

பாஸ்கரன் :—மாமி! ஸாதனை எதுவுமில்லை. நன்றாக அறிவும் அனுபவமும் முதிர்ந்தவர்களின் தீர்க்கதரிசனம் போன்ற யோசனை வார்த்தைகளைக் கேட்டு நான் வியப்படைகிறேன். தவிர நான் இன்று காலைதான் ஊரிலிருந்து வந்தேன். இதே பாடங்கள்—புராணங்கள்—இனி எனக்கும் ஆரம்பமாகிவிடும். அதற்கென்ன பதில் சொல்வது என்றுதான் யோசிக்கிறேன். மற்றபடி ஒன்றுமில்லை. மாமி! நீங்கள் சொல்வது அனேக விஷயங்களில் நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நானே கண்டிருக்கிறேன். ஆனால் பையன்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் கல்யாணமாகிவிட்டால் செலவு பெருகிவிடும். ஸம்ஸாரம் வ்ருத்தியாகிவிடும். வருவாய்ப் போதாதே. என்ன செய்வது என்று சிலர் நினைத்துக் கூறுகிறார்கள். ஆனால் அந்தச் சாக்கையே வைத்துக்கொண்டு நீங்கள் சொல்வதுபோல் செய்துவிடுகிறார்கள். மாமி! நான் இன்றே ராமுவுக்குக் கடிதமெழுதுகிறேன். ராமுவைப்பற்றி நீங்கள் இப்படிப்பட்ட பயம் கொள்ளவே வேண்டாம். அவன் மகா புத்திசாலி. கெட்டிக்காரன். நான் அவனை உத்தமன் என்று பரிபூர்ணமாக நம்புகிறேன். ராமுவுக்கு அதிக வேலை இருக்கிறதோ என்னவோ! கடிதம் வந்து இரண்டு மாதங்களாகிவிட்டன. உங்களுக்குக் கடிதம் வருகிறதல்லவா?....என்று கேட்கும்போது தபால்காரன் ஒரு கவரைக் கொண்டு கொடுத்தான்.

சாம்பு மாமா "அடேடே ராமுதான் எழுதி இருக்கிறான். எங்கேயோ கேம்புக்குப் போகவேண்டும், வேலை அதிகமிருப்பதால் அடிக்கடி கடிதம் எழுத முடியாது,

கோபிக்க வேண்டாம் என்று சென்ற மாதம் ஒரு கடிதம் வந்தபிறகு இன்றுதான் வந்திருக்கிறது" என்று வெகு உத்ஸாகத்துடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்க எடுக்கும் போதே அதிலிருந்து சிறிய புகைப்படம் ஒன்று வெளிப் பட்டதைக் கண்டு சாம்பு குழம்பியவாறு திடுக்கிட்டார். எனினும் சமாளித்துக்கொண்டுக் கடிதத்தைப் படித்தார். முற்றிலும் படிப்பதற்குள் தலைமீது இடியே விழுந்துவிட் டது போன்ற பெரும் அதிர்ச்சியடைந்து சாய்ந்துவிட்டார்.

மாமியும் பாஸ்கரனும் விஷயம் புரியாமல் தாக்குத லடைந்து கடிதத்தை மாமி எடுத்துப் பார்க்கையில் படமே காக்ஷியளித்து அவள் உயிரையும் கவ்விக்கொள்வது போன்ற வேதனையை உண்டாக்கி "ஹா....பாஸ்கரா! தலை மேல் இடி விழுந்துவிட்டது. இதை நீயே பாரு" என்று படத்தையும் கடிதத்தையும் அவனிடம் கொடுத்தாள். பத றியவாறு பாஸ்கரன் படத்தைப் பார்த்தான். என்ன கொடுமையான காட்சி? இத்தனை நேரம் எந்த ராமுவைப் பற்றி ப்ரமாதமாய்ப் பேசினரோ அந்த ராமு ஒரு பஞ்சாபி பெண்ணுடன் மணக்கோல மாலையும் பொக்கேயுமாகக் காக்ஷியளிப்பதைக் கண்டதும் உண்மையில் பாஸ்கரனின் மனது கொதித்துவிட்டது. சீச்சி! அறிவுகெட்ட கழுதை. புலன்களை அடக்கியாளும் சக்தியற்ற அற்பன். முட்டா ளினும் அடிமுட்டாள் என்றால் தகும். எந்த பயங்கரத்திற் குப் பெற்றோர்கள் நடுங்கித் தவித்தார்களோ! அந்த கோரக் காக்ஷியையே கண்முன்பு காண்பதென்றால் எத் தனை பரிதாபமாயிருக்கிறது என்று கூறியபடியே கடிதத் தைப் படித்தான்.

என்னருமை பெற்றோருக்கு நமஸ்காரம்.

உபய குசலம்.

இக் கவரைப் பிரிக்கும்போதே மின்ஸாரத்தினால் நீங்கள் தாக்குண்டு துடிதுடிப்பதை என் மானஸீகக் கண்களால் காண்கிறேன். ஆனால் என்ன செய்யமுடி யும்? கால வெள்ளத்தை நீந்தியடித்து தைரியமாய்க் கரைசேரும் உத்தமர்கள் தற்கால உலகததில் ஆயிரத் திற்கு ஒருவர்கூட கிடைக்கமாட்டார்கள். ஆத்ம சக்தியோ சகலத்தையும் தாக்கும் பொறுமையின் பொக் கிஷமான குணக்குன்று போன்ற மன உறுதியோ இல் லாத அல்பனாகிய நான் வெள்ளத்திற்குப் பலியாகி விட்டதைப்பற்றி சொல்லவே தெரியவில்லை. மன்னிக்க வும். இதற்குமேல் எழுத மனமும் ஓடவில்லை. என் னுடைய விதி என்னை எப்படி ஆட்டுகிறதோ அப்படி என் வாழவுச் சக்கரம் சுழல்கிறது. பஞ்சாபிப் பெண்ணை

நான் விரும்பி ரிஜிஸ்தர் மணமாகிவிட்டது. அந்தப் புகைப்படத்தை நீங்கள் பார்க்க விரும்பமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். அப்படித் தெரிந்தும் நான் இதை ஏன் அனுப்பினேன் என்ருல், இனிமேல் கல்யாணத்தைப் பற்றிய கடிதம் எழுதாமலிருப்பதற்காக அனுப்பினேன். என்னை நீங்கள் மனப்பூர்வமாக வெறுப்பதையும் அறிகிறேன். என்று அந்த வெறுப்பு நீங்கி விருப்பு உண்டாகிறதோ அன்று என்னை அழைத்தால் நான் வருகிறேன். மன்னிக்கவும்.

இங்ஙனம்,

ராமநாதன்.

பாஸ்கரனின் மனதே இக்கடிதத்தைப் படித்து உடைந்துவிட்டது என்ருல் ராமுவின் பெற்ருேர்களைப் பற்றிக் கூறவா வேண்டும்? இருவரும் தம்மையே மறந்து பெரிதாக அழத் தொடங்கிவிட்டதோடு மயக்கமாய் சாய்ந்தும் போனுர்கள். பாஸ்கரனுக்கு ஒன்றுமே தோன்ருத நிலையில் கதி கலங்கிவிட்டது. அவர்களை மெல்லத் தேற்றி ஆறுதலளிக்க ப்ரம்ம ப்ரயத்தனம் செய்தும் பலிக்கவில்லை.

அவர்களுடைய சொந்தக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவமானகர விஷயத்தை நாம் ஏன் பகிரங்கப்படுத்த வேண்டும். ஏதோ ஒருவாறு பூசி மெழுகிப் பூச்சுற்றித் தானே ஆகவேண்டும் என்று பாஸ்கரன் எண்ணியதால் அதையே சாம்பு மாமாவிடம் கூறி, "மாமா! நீங்களே இப்படி மனத்தைத் தளரவிட்டுவிட்டால் மாமிக்கு யார் தேறுதல் கூறுவார்கள். இந்த ஆபாஸ விஷயத்தை இப்போதே நீங்கள் ஊரறியச் செய்யாமல் மெல்ல மறைத்துக் கண்ணியமாக இருக்கப் பாருங்கள். போகப்போக எப்படியாகிறதோ பார்க்கலாம். நான் அடுத்தவாரம் வேறு ஊருக்குப் போகிறேன்..." என்று கூறி முடிக்குமுன், "அப்பா பாஸ்கரா! நீயும் ஒரு பார்ஸிக்காரியையோ, கிறிஸ்துவப் பெண்ணையோ மணந்துகொண்டு இப்படியே புகைப்படமும் கடிதமும் அனுப்பிவிடப்பா. இதுதானே இக்காலத்தில் பிள்ளைகளைத் தனியே வெகுதூரத்திற்கு உத்தியோகத்திற்கு அனுப்பிவிட்டு பெற்ருேர்கள் அவதிப்படும் விதியாகிவிட்டது" என்று படபடத்து ஆக்ரோஷத்துடன் சொல்லிவிட்டார்.

அவருடைய கொதிக்கும் மன உணர்ச்சியை அறிந்த பாஸ்கரன் கோபிக்கவில்லை. பெற்ற உள்ளத்தின் பரிதவிப்பு—பாசம்—கரைகாணுத அன்பின் வேகம்—என்றே எண்ணினுன். "மாமா! என்னையும் அப்படித்தான் உலகம்

பேசக்கூடும். ஆனால் நான் அதற்கு இடங்கொடுக்கவில்லை. இப்போது கல்யாண விஷயமாகத்தான் வந்திருக்கிறேன்" என்று தன்னையறியாமல் கூறிவிட்டான்....“மாமி! பொறுமையை இழக்காதீர்கள். நேரமாகிவிட்டது' நான் போய் வருகிறேன். நான் பழைய சிநேகத்தின் அன்பை எண்ணி நமஸ்கரிக்க வந்த இடத்தில் இத்தகைய இடியொன்ற விஷயத்தைக் கேட்டு வருந்துகிறேன். நான் கூடிய சீக்கிரத்தில் ராமுவிடம் நேரில் சென்று விஷயங்களை அறிந்து உங்களுக்கு விவரமாக எழுதுகிறேன். சற்று அமைதியை அடையுங்கள். ராமுவுக்கு நீங்கள் ஆத்திரத்தில் ஏதாவது கடிதம் எழுதிவிடாதீர்கள். அதைக் கண்டு பயித்தியக்காரன் தற்காலத்தில் ஆங்காங்கு நடப்பதுபோல் ஏதாவது செய்துவிடப்போகிறான். உங்கள் வயிறு செய்த பாக்கியத்தில் பிள்ளை சுகமாக உயிருடன் ஜீவித்திருக்கும்படிக் காண மார்க்கத்தைத் தேடுங்கள். அம்மா எனக்காகக் காத்திருப்பாள்" என்று கூறி விடைபெற்றுச் சென்றான். இந்தச் சம்பவம் வாழ்க்கையில் ஒரு சுழல்போன்று அவனுக்குத் தோன்றியது.

4

புயலுக்கு மத்தியில் புதுமை

சுரியான வெய்யில் உக்ரகத்துடன் காய்கிறது. மனத்தில்ஏற்கனவே உள்ள பலகுழப்பங்களுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோன்ற ராமுவின் சம்பவம் பாஸ்கரனின் இதயத்தைத் தாக்கிவிட்டது. ஆதியில் ராமுவும் தானும் அதே ஆற்றில் குளித்துவிட்டு அங்கு கரைமேல் இருக்கும் வினாயகர் கோயிலுக்குச் சென்று ப்ரக்ஷண நமஸ்காரம் செய்வதும், நாவல் மரத்திலுள்ள பழங்களை உலுக்கி பிள்ளையாருக்கு நைவேத்யம் செய்து பின் தாங்கள் சாப்பிட்டதும், பாதிரி மரத்திலிருந்து புஷ்பங்கள் பொருக்கிவந்து பிள்ளையாருக்கு சாத்திப் பின் வீட்டுக்குக் கொண்டுசெல்வதும், அதிலும் பரீக்ஷை காலம் நெருங்கிவிட்டால் பிள்ளையாருக்கு வேண்டுதலுடன் ஸேவை செய்ததையும், இதுபோன்ற பல எண்ணங்கள் அவன் இதயத்திலிருந்து சுருண்டெழுந்தன.

அத்தகைய ராமுவா இன்று இத்தகைய அந்தகாரத்தில் வீழ்ந்துவிட்டான்?...“அப்பனே வினாயகா!என்னை இதுவரையில் தூய இதயத்துடன் காத்து ரக்ஷித்ததுபோல் இனியும் என்றென்றும் காப்பாற்று. வரம்புக்கு மீறி எத்

தகைய துர்ச்செயலிலும் செல்லாதபடி உறுதியைக்கொடு" என்று ஸ்நானத்தின்பின் வேண்டிக்கொண்டு ப்ரதக்ஷண நமஸ்காரத்தை முடிந்தபின் வீட்டிற்கு வந்தான்.

வாசல் நடைப்பக்கம் போகும்போதே உள்ளிருந்து வரும் குரலைக் கேட்டு தடைக்கட்டிய நாகம்போல் நின்று அதை உற்றுக் கவனிக்கத் தொடங்கினான்.

"ஏண்டீ! மூதேவீ! நான் சொல்லுவது காதில் விழுந்ததா இல்லையா! பேசா மடந்தைபோல் நிற்கிறாயே! உன் ஊத்தைவாய் அடைத்துவிட்டதா! அல்லது உன் அப்பன் செய்துள்ள சீரும் சிறப்பும் கண்டு கர்வம் மண்டைக்கேறி விட்டதா? இதோ பாரு. மறுபடியும் சொல்கிறேன். நீ எந்த விஷயத்தை முன்னிட்டும் கீழேயே வரக்கூடாது. பாஸ்கரனுக்குப் பெண் கொடுக்கும் ப்ரபுக்களும் அந்தப் பெண்ணும் இன்று மூன்றுமணிக்கு இங்கு வரப்போகிற விஷயம் உனக்குத் தெரியும். அதற்குள் சொஜ்ஜி, பஜ்ஜி, காப்பி முதலியவைகளைச் செய்து வைத்துவிட்டு மாடிக்குச் சென்று குங்குமத்தைவாரி முகத்திற்குப் பத்துப் போட்டுக்கொண்டு படுத்து முடங்கிக் கிடக்கவேண்டும். தலையைக் காட்டினாயோ தொலைந்துவிடுவாய். ஜாக்கிரதை. நாங்கள் சாப்பிட்ட பிறகு நான் குரல் கொடுக்கிறேன். அதுவரையில் கீழே தலைகாட்டக் கூடாது. பத்திரம்" என்று கர்ஜிக்கும் பத்ரகாளிக்கு எதிரில் கதவு மூலையுடன் மூலையாகப் பதுங்கி நிற்கும் பெண்ணுருவம் விம்மலும் குமுறலும் கண்ணீரும் விஞ்சிவிட்ட வேகத்துடன் தலையை மட்டும் ஆட்டிவிட்டு மாடிக்கு ஒரே ஓட்டமாக ஓடினாள்.

இந்த அனியாயமான சட்டதிட்டத்தின் கொடுமைக் காக்ஷிகள் பாஸ்கரனின் மனத்தில் இன்னும் அதிகமாகப் பாய்ந்து வேலைசெய்யும் உணர்ச்சியுடன் கூடத்திற்கு வந்தான். தான் ஒன்றும் அறியாதவன்போல் 'உம்! ஒரு மருமகளை ஆட்டிவைப்பது போதாமல் இன்னொருத்தியும் தேவைபோலிருக்கிறது? என்று மனத்திற்குள் நினைத்தபடி உடையணிந்தான்..."ஏம்மா! யாருடனே உறக்கப்பேசினாய் போல் தோன்றியதே....யார் வந்தார்கள்....?" என்று ஒரு கேள்வியையும் வெடிபோல் போட்டுவைத்தான்.

இப்படிக் கேட்பான் என்பதை எதிர்பார்க்காத அகிலாண்டம்மாள் முதலில் அசடுவழிய சிலவினாடி நின்றபிறகு மெல்லிய குரலில், "அதுவா, இந்தப் பக்கத்து வீட்டில் ஒரு வாழாவெட்டிப் பெண் வந்திருக்கிறது. அந்தச் சனியனுக்கு வேலை இல்லை, சமயமில்லை. எப்போது பார்த்தாலும் இங்கு வந்து உட்கார்ந்து வம்புக்கிழுக்கிறது. அதை

இனி இங்குவரவேண்டாம் என்று கூறி புறக்கடைவழியாக அனுப்பிவிட்டேன். ஏன் உனக்கு இத்தனை நேரம்'' என்று சால்ஜாப்புக் கூறி வினவினாள்.

ராமுவின் விஷயத்தைக் கூற அவன் விரும்பாததால் "என்னம்மா நேரமாகிவிட்டது. நன்றாகத் துளைந்து ஸ்நானம் செய்தேன். பழய நண்பர்களில் சிலரைக் கண்டு பேசினேன். பிள்ளையார்கோவிலுக்குச் சென்றுவந்தேன். சரி... அப்பாவும் அண்ணாவும் எங்கே. அவர்கள் சாப்பிட்டாயிற்றா" என்றான்.

அகிலாண்டம்:—நன்னாயிருக்குடா! அத்திப் பூத்ததுபோல் நீவந்திருக்கையில்உன்னுடன்சாப்பிடாமல்தனியாகச் சாப்பிட்டுவிடுவார்களா! ஏதேதோ காரியமாக வெளியே போயிருக்கிறார்கள். எல்லாம் கல்யாண விஷயம்தான்.

பாஸ்கரன்:—ஏம்மா! இன்றைக்கே கல்யாணமா?''என்று கூறி நகைத்தான்.

அகி:—போடா! பயித்தியம்; இன்று பார்க்கும் பார்வை, நடக்கும் பேச்சு, காட்டும் அன்பு இவைகள்தான் கல்யா கட்டிடத்திற்கு முக்கிய அஸ்திவாரமாகும். அதனால்தான் அதற்கான சிலமுக்கிய காரியங்களைக் கவனிக்கப்போயிருக்கிறார்கள்'' என்று கூறும்போது சேஷகிரி மிக்க மகிழ்ச்சியுடன் சர்க்கரை வெத்திலைபாக்கு முதலிய சாமான்களுடன் வந்தான்.

பின்னாலேயே அவன் பிதாவும் புஷ்பம், வாழை இலை பழதினுசுகள் முதலிய மங்களகரமான வஸ்துக்களுடன் உள்ளே நுழைந்தபடி, "பயல் வந்தானா! இன்னும் வரவில்லையா?" என்று அங்கலாய்ப்புடன் கேட்டார்.

"இதோ உட்கார்ந்திருக்கிறேனப்பா! வாருங்கள் சாப்பிடலாம். என்ன! மன்னீ! இலை போட்டாயா?" என்று ஒரு கேள்வியைப் கேட்டுவிட்டுப் பின் தாயாரின் — தமயனின்—முகத்தைக் கூர்ந்து கவனித்தான். "போதுமே வயிற்றெரிச்சல். அவளுக்கு திடீரென்று காய்ச்சலான காய்ச்சல் வந்துவிட்டது. இந்நேரம் தலைக்குப் பத்து போட்டுவிட்டு மருந்தும் கொடுத்துவிட்டு வந்தேன். நான் உனக்குக் கணிசமாகத் தோன்றவில்லையா. தினந்தோறும் ஓட்டல் சாப்பாடு சாப்பிடும் உனக்கு உன்னருமைத் தாயாரின் கையால் சமைத்துப் போட்டுச் சாப்பிடவேண்டுமென்று ஆசை இல்லையா! வாடா! இலை போட்டாயிற்று, உட்காரு....'' என்று முடிப்பதற்குள், "அட க்ரகச்சாரமே!

இன்று முக்கியமாய் வேலை இருக்கும்போதுதான் அவ னுக்கு உடம்புக்கு வரவேண்டும். இதை முதலிலேயே சொல்லி இருந்தால் அவர்களை........"என்று இழுப்பதற் குள்..."போதும் உங்கள் சமத்து. இந்த அஸமஞ்சத்தின் உடம்புக்காக நடக்கவேண்டிய காரியத்தை ஒத்திப்போடு வதா! பேஷ்! யாராவது சிரிக்கப்போகிறார்கள். உம்... உட்காருங்கள். செய்த சமயல் ஆறி அவ்லாய்ப்போகிறது" என்று கூறியபடியே சேஷகிரியை ஒரு தினுசாகப் பார்த்தாள்.

இந்த பார்வையும், ஜாடையும், சவிக்னைப் பேச்சும், ஊமை பாஷையைப்போல் பழகியுள்ள சேஷகிரிக்குப் புரிந்துவிட்டது. இதையும் பாஸ்கரன் பார்க்காமலில்லை. மனத்திற்குள் அடிக்கும் வேதனைப் புயலில் இந்தச் சம்பவச் சுருளும் கலந்தது.

கடிகாரம் கணக்காய் டாண் டாண் டாண் என்று தன் கடமையைச் செலுத்தி மூன்று முறைகள் ஒலித்து ஓய்ந் தது. அகிலாண்டம்மாளின் அலங்காரத்தைக் கண்ட பாஸ் கரனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அன்று தான் வாங்கிவந் திருந்த பெரிய சரிகைச் சேலையைக் கட்டிக்கொண்டு தனக் குள்ள நகைகளை எல்லாம் வாரியணிந்து தான்தான் கல்யா ணப் பெண்ணோ என்று சந்தேகிக்கும்படி நிற்பதைப் பார்த்து சேஷகிரி கூட சிரித்துவிட்டான் என்றால் மற்றை யோருக்குக் கேட்கவேண்டுமா!

கூடத்தில் பெரிய ஜமுக்காளம் போட்டு அலங்காரம் செய்துவைத்தாள். பாஸ்கரன் சாதாரணமாக நிற்பதைப் பார்த்து, "ஏண்டா அம்பீ, இதென்னடா கோலம். சாதா ரண வேஷ்ட்டியும் சொக்காயுமாக காக்ஷிகொடுக்கிறாயே! பாண்டும்! புஷ்கோட்டும்! எல்லாம் போட்டுக்கொண்டு தடபுடலாக வாடா! மணியாகிவிட்டது. ஐ. ஏ. எஸ். பாஸ் செய்தப் பிள்ளையாண்டானைப் பார்க்கும்போதே கம்பீர மாய்! ஜோராய் கவர்ச்சிகரமாய் யிருக்கவேண்டாமா? போய் ட்ரஸ் பண்ணிக்கொண்டு வாடா!" என்றாள்.

"அம்மா! இதற்குமேல் நான் அலங்காரம் எதுவும் செய்துகொள்ள மாட்டேன். என்னுடைய தாயாரைப் பார்க்கும்போதே அவர்கள் மயங்கி மூர்ச்சை போட்டுவிடு வார்களோ! என்று பயப்படக்கூடிய அளவு அலங்காரத்து டன் நீ நிற்கையில் என்னைப்பற்றி என்னக் கவலை? வேண் டுமானால் அப்பாவையும் பெரிய சரிகை வேஷ்டி உடுத்திக் கொள்ளச் சொல்லு. என்னைத் தொந்தரவு செய்யாதே"

என்று கண்டிப்பாக பாஸ்கரன் கூறிவிட்டதால் மேலே எதுவுமே சொல்லமுடியாமல் அகிலாண்டம்மாள் அடங்கி விட வேண்டியதாயிற்று.

சரியாக மூன்றடித்ததும் வாசலில் கார் வந்து நின்றது. அவஸர அவஸரமாக அகிலாண்டம்மாள் வாசலுக்கு ஓடினாள். வெகு சர்வ சாதாரண அலங்காரத்துடன் பெண்ணின் பெற்றோர்கள் இறங்கினார்கள். பெண்ணும் தந்தக் கொடிபோல் நாகரீக அலங்காரம் அதிகமில்லை என்றாலும் பெரியவர்களைப் போன்ற கர்னாடகமான நிலையை மீறி, அஜண்டா கொண்டையும், சாயம் பூசிய நகங்களும் ஜார்ஜெட்டு புடவையும், கையில் ஒரு வளையல் உள்ளங் கழுத்தில் ஒரே ஒரு வைர நெக்லேஸ். இவ்வளவு அலங்காரத்துடன் இறங்கி சற்று அடக்க ஒடுக்கமாகவே வந்தாள்.

சாதாரண வேஷ்டியும் உருமாலுமாகவே பெண்ணின் பிதாவும் காக்ஷியளிப்பதைப் பார்த்து பாஸ்கரன் உள்ளுக்குள் பூரித்தான். மூவரையும் சந்திரசேகரனும் அகிலாண்டமும் வரவேற்று தடபுடலாக உபசரித்து தக்க ஆஸனங்களில் அமர்த்தினார்கள். புதிய யுக தர்மத்தைப் போல் கையைக் குவித்து நமஸ்காரங்களைச் செய்தார்களேயன்றி பெண்ணோ! பிள்ளையோ தனியான முறையில் வணங்கவில்லை.

அகிலாண்டம்மாளின் ஆடம்பர அலங்காரத்தைக் கண்ட கல்யாணப் பெண் தனக்குள் வெகு ப்ரயாஸைப் பட்டுச் சிரிப்பை அடக்கிக்கொண்டாள். இந்த ரகஸ்யத்தை அகிலாண்டத்தைத் தவிர மற்றவர்கள் அறிந்து கொண்டார்கள் என்று சொல்லவேண்டுமா! பாஸ்கரனும் வெகு ச்ரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக்கொண்டு தன் வாழ்க்கைப் படகைச் சந்தோஷமாக ஓட்ட வந்துள்ளப் படகோட்டியைப் போன்ற பெண்ணை நன்றாகக் கவனிப்பதில் அவன் பின்வாங்கவில்லை.

சந்திர:—எங்களுக்குள்ள சந்தோஷத்தைச் சொல்லவே முடியாது ஸார்! என் மனைவிக்கோ அடாடாடா! அபார மகிழ்ச்சி என்றால் மிகையாகாது. ஏதோ கடவுளின் கருணையால் நமது சம்மந்தம் சிறப்புற்று ஓங்கவேண்டும்.... அகிலாண்டம்......எங்கே டிப்பன்......

கூடத்திற்கு எதிர்ப்புறமுள்ள பெரிய அறையில் சம்மந்தியம்மாளுடன் உட்கார்ந்திருந்த அகிலாண்டம் ஒரு தள்ளு தள்ளியவாறு எழுந்து ஓடினாள். ஏற்கெனவே

ஒரு சமையல்காரனைச் சற்று அப்படியும், இப்படியும் நடமாடச் செய்திருந்ததால் அவனிடம் பணிக்கையாகக் கொடுத்தனுப்பினாள். அந்த மனிதனும் இத்தகைய காரியங்கள் அஸாத்யமாய்ச் செய்து கைதேர்ந்த பேர்வழியாதலால், தடபுடலாக வந்து பலகாரங்களைக் கொடுத்ததோடு நிற்காமல் அகிலாண்டம்மாளின் உபதேசத்தின்படித் தானே பேசத்தொடங்கி, "அடாடாடா! என்ன பொருத்தமான சம்மந்தம் போங்கோ! சம்மந்திகளின் ஒற்றுமை தான் அப்படி என்றால் மணமக்களின் ஜோடியைப் பார்த்தால் த்ருஷ்டி படாமலிருக்க வேண்டுமே என்று தோன்றுகிறது. ஸார் வீட்டில் நான் எத்தனையோ! டின்னர்களுக்கும் டீபார்ட்டிகளுக்கும் செய்திருக்கிறேனே. நினைவிருக்கிறதா! பாதாம் ஹல்வாயைத் தவிர மற்றபடி அங்கு நடக்குமா!" என்று பெருமையாக மிகைப்படுத்தித் தானே வலுவில் பேசியவாறு பரிமாறினான்.

ஸேதுராமனும், இயற்கையிலேயே மிகமிகச் சிறந்த உத்தம குணமுடைய பெரிய மனிதராகையால் சமயல்காரன் என்று வித்யாஸத்தைக் காட்டாமல் சிரித்தபடியே' "ஏன் நினைவில்லாமல் போகிறது. எதை மறந்தாலும், சாப்பாட்டை மறக்கமுடியமா! பஜ்ஜியும் ஸொஜ்ஜியும் ப்ரமாதமாயிருக்கிறது. நீர் செய்வதற்குக் கேட்க வேண்டுமா"... இந்த வார்த்தையைக் கேட்கும்போது அகிலாண்டம்மாளின் இதயத்தில் அவளையறியாமல் திக்கென்றது. உண்மையில் அவன் நடமாடும் தெய்வமாக வந்த சமயல்காரனேயன்றி அவன் அடுப்பில் தண்ணீர்கூட காய்ச்சவில்லை. சகலமும் இந்தம்மாளின் ஆக்கினைப்படிக்கு சிட்டுக் குருவிபோல் பரந்து பரந்து எல்லா வேலைகளையும் செய்துவிட்டுத் தலைநிறைய பத்து வேறு பூசிக்கொண்டு மருமகள் மாடியிலிருக்கும் ரகஸியத்தை அவளைத் தவிர வேறு யாருக்குத் தெரியமுடியும்? பலகாரம் வெகு நன்றாயிருப்பதாகச் சொல்லிச் சாப்பிடுவதைக் கண்டு ஒரு சிறிது சந்தோஷமும் அடைந்தாள்.

சம்மந்தியம்மாளுக்கும் பெண்ணுக்கும் கொடுத்துவிட்டுத் தானும்கூட மரியாதைக்காகக் கொஞ்சம் வாங்கிக் கொண்டாள்.

சம்மந்தியம்மாள் :— இந்த காரியம் எங்கள் வீட்டில் நடந்திருக்க வேண்டும். எங்க எஜமானருக்கு நீங்கள் நாங்கள் என்கிற வித்தியாஸமே கிடையாது. அதனால்தான் தானே முதலில் வருவதாக எழுதிவிட்டார். இந்த சம்மந்தத்தில்

எங்களுக்கு அத்தனை த்ருப்தி என்பதை இச் செய்கையே வெளியிடுகிறதல்லவா !

அகிலா :—சொல்லவா வேண்டும். நாம் எப்போது சம்மந்தம் செய்வதென்று தீர்மானித்து விட்டோமோ அப்போதே ஒன்றுபட்ட குடும்பத்தினராக ஆகிவிட்டோமல்லவா! எனக்கும் அப்படித்தான் வித்யாஸம் என்பதே கிடையாது. இனி இந்த வீடு உன் வீடல்லவா ; வெட்கப்படாமல் சாப்பிடு" என்று பெண்ணையும் பார்த்து ஒரு கண்ணடித்துக் கூறினாள்.

பெண்ணின் தாயார் மிக்க மரியாதையுடன் பேசத் தொடங்கி "ஏம்மா! உங்கள் மூத்த நாட்டுப் பெண் எங்கே காணவில்லை. பிறந்தகத்திற்குப் போயிருக்கிறாளா?" என்று நைஸாகக் கேட்டாள். ஏனென்றால் இந்த அம்மாளின் அட்டகாசம் அந்த ஊர் பூராவும் ப்ரஸித்தமாகி விட்டதால் இந் தம்மாளுக்கும் சிறிது விஷயம் தெரிந்துதான் கேட்கிறாள் என்பது அகிலாண்டம்மாளுக்குச் சடக்கென்று மனத்தில் பட்டது. முகத்தில் எத்தனைவிதமான அசட்டுக் களைகள் தாண்டவமாடலாமோ அத்தனையும் நிர்தனம் செய்து ஒரு கலக்குக் கலக்கியது.

கேட்டதற்குப் பதில் சொல்லாதிருப்பது மரியாதைக் குறைவென்பதும் அவளுக்குத் தெரியாமலில்லை. ஆகையால் மெல்ல சமாளித்துக் கொண்டு "அதை ஏன் கேட்கிறீர்கள் போங்கள். தனக்கு ஓர்படி வரப்போகும் பெருமையில் மூன்று நாட்களாகக் குதித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று நேற்று காலை ஜுரமான ஜுரமும், தலைவலியும் தாங்க முடியாமல் வந்துவிட்டதால் மாடியில் படுத்திருக்கிறாள். இத்தனை நேரம் நான் அங்குதானிருந்தேன். அவள்தான் என்னைத் தொந்தரவு செய்து கீழே போகும்படி அனுப்பினாள். அவளுடைய ஆசைக்கு அளவிட முடியாது .....

என்று முடிப்பதற்குள்..."ஐயோ பாவம்! ஏன் திடீரென்று ஜுரம் வந்துவிட்டது. டாக்டரிடமிருந்தா மருந்து கொடுக்கிறீர்கள்? அவளுக்குப் பிறந்த ஊர் எது. கூடப் பிறந்தவர்களும் பெற்றோர்களும் எங்கிருக்கிறார்கள்?" என்று கேள்விகளை அடுக்கினாள்.

அகிலா :—உம்... அது ஒரு சோகக்கதை. இந்த மங்களகரமான சமயத்தில் அதை ஏன் கிளப்ப வேண்டும். அவளை ஆகாயம் போட்டது பூமி ஏந்தியது என்கிற பழமொழிக்கு

விதி இலக்காக்கிவிட்டது. அவளுக்குப் பெற்றோருமில்லை. உற்றோருமில்லை. எங்க நாத்தனாரின் பெண்தான் அவள். அவளுடைய தகப்பன் மட்டும் வேறுகல்யாணம் யாரையோ ஒரு கிருஸ்த்துவப் பெண்ணைச் செய்துகொண்டு ப்ரஷ்டனாகி விட்டான். நாத்தனார் சாகும்போது எங்கள் காலில் விட்டுப் போனாள். பரதேசியை வளர்த்து என் மகனுக்கே மணமும் செய்து கொண்டேன். என்ன செய்வது. எல்லாம் கால வித்தியாஸந்தான்.

சம்மந்தி :—ஐயோ! பாவம்: கேட்கவே வருத்தமாயிருக்கிறது. வாருங்களேன். போய் பார்த்துவிட்டு அகல்யாவையும் அவளுக்குக் காட்டிவிட்டு வரலாம்," என்று சொல்லியதும் அகிலாண்டம்மாளுக்குத் தூக்கிப் போட்டது. என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் க்ஷண நேரம் குழம்பிப் போனாள். பிறகு சற்று தெளிவு பெற்றவளாய்... "நீங்கள் கேட்கும்படி நான் அழைத்துப் போகாமலிருப்பேனா! அவள் தலையும் வேஷமும் பத்தும் போட்டுக்கொண்டிருப்பதால் எனக்கு வெட்கமா யிருக்கிறது. இங்கு யாரையும் அழைத்துக் கொண்டு வரக்கூடாது மாமி - என்று முதலிலேயே கேட்டுக் கொண்டாள். உடல் நிலை சரியான பிறகு நான் அழைத்து வருகிறேன்" என்று முற்றுப் புள்ளியைத் தானே வைத்துவிட்டாள்.

சாப்பாடு முடிந்ததும் கல்யாணப் பேச்சுத் தொடங்கியது. "பையனுக்கு ஒரு வாரங்கூட லீவு கிடையாது. பாஸ்கர்! அந்தக் கடிதத்தைக் காட்டப்பா"....என்றார். பாஸ்கரன் ஆபீஸ் கடிதத்தைக் காட்டினான். ஸேதுராமன் சிரித்துக் கொண்டே...."மிக்க சந்தோஷம். இந்த ஊரில் நான் ஏற்கெனவே வேலை பார்த்திருப்பதால் நாமே அடுத்த மாதம் அங்கு போய் கல்யாணத்தை முடித்து விடலாம். எனக்கு அந்த ஊரில் வேண்டியவர்கள் அதிகமுண்டு.... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்றார்.

சந்திரசேகரன் :—ஏன் ஸார்! இந்த ஒரு வாரத்திற்குள்ளேயே சரியான முகூர்த்தங் கிடைத்தால் விவாகத்தைச் செய்துவிட்டுப் பெண்ணையும் கூடவே அழைத்துச் சென்று குடித்தனம் வைத்துவிடலாமே!

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது" என்று அகிலாண்டம்மாள் தானும் கலந்து கொண்டாள். சேஷகிரி மட்டும் சம்மந்தமில்லாது சும்மா இருப்பானா! "ஸார்! நான் போய் எங்கள் வீட்டுப் புரோகிதரை அழைத்து வந்து விடுகிறேன். இன்றே முகூர்த்தம் பார்த்து நிச்சய

மும் செய்துவிடலாமே! இதோ இந்தத் தெருவிலேயே இருக்கிறார்" என்று முந்திக்கொண்டான்.

சந்திர :—சம்மந்தி ஸ்வாமி சொல்லட்டும். பிறகு போய் அழைத்து வா·

ஸேது :—எனக்கு எதைப்பற்றியும் ஆக்ஷேபனேயே இல்லே. அகல்யாவின் சம்மதமும் மாப்பிள்ளேயின் இஷ்டமும் தெரிந்தால் போதும்" என்று கூறிவிட்டு இருவரையும் ஓரக் கண்ணுல் பார்த்தார்.

பெரியவர்களின் இஷ்டப்படியே நடக்கட்டும் என்று முற்றுப்புள்ளி வைத்ததுபோலிருந்தது மணமக்களின் பார்வையும், மௌனமும். உடனே ஆக்ஷேபனே இன்றி அடுத்த நிமிஷமே சமயல்காரன் முந்திரி கொட்டையைப் போல் முந்திக்கொண்டு புரோகிதர் வீட்டிற்கு ஓடி அழைத்து வந்துவிட்டான். தனக்கு இந்த வைபவத்தில் தில் சரியான வரும்படி வரும் என்பதே அவனுடைய நிலேவு.

"வாருங்கள்! வாருங்கள்! சங்கர சாஸ்த்திரிகளே! சம்மந்தியை உமக்கு நன்ருகத் தெரியுமல்லவா..." என்ருர் சந்திரசேகரன்.

சக்கர :—அடாடாடா! எனக்குத் தெரியாதவர்கள் இந்த ஊரில் யாராவது உண்டா? சென்ற மாதங்கூட ஐயர்வாள் வீட்டில் ச்ரார்த்தம் செய்துவைக்க நான் போயிருந்தேன். என்ன ஐயர்வாள்! சரிதானே.

ஸேது :—ரொம்ப சரி! எனக்கு 5 மணிக்கு ஒரு மீட்டிங் இருக்கிறது. ஆகையால் இன்னும் ஒரு வாரத்திற்குள் நம்ம குழந்தை அகல்யாவின் கல்யாணத்திற்கு நல்ல நாளாகப் பார்க்கவேணும். அதற்காகத்தான் அழைத்தது" என்ருர்.

உடனே பஞ்சாங்கங்களின் சலசலப்பான ஓசைகள் புரண்டன. புரோகிதரின் கைவிரல்களும் வாயும் கணக்குப் பரிக்ஷையில் ஈடுபட்டதோடு நடுநடுவே நவக்கிரகங்களின் நாமதேய உச்சரிப்புக்களும் ஒலித்தன. எல்லோரும் புரோகிதரின் முகத்தையே பார்த்தார்கள். இதையே ஒரு சந்தர்பமாக எண்ணிய பாஸ்கரன் மெல்ல எழுந்து நழுவி விட்டான். அவன் மனத்தில் தன் தாயின் கொடுமையும், மன்னியின் பரிதாபமுமே பலமாகப் போராடுவதில் கல்யாணத்தின் ஒரு புத்துணர்ச்சியோ களிப்போ அவன் மன

தைக் கவரவில்லை. மன்னியைப் போய் பார்த்துவிட வினாடிக்கு வினாடி அவன் உள்ளம் துடியாய்த் துடித்தது. சமயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவன் சடக்கென மறைந்து மாடிக்குப் பூனைபோல் சென்றான்,

படிக்கட்டு ஏறும்போதே விசும்பி விசும்பி அழும் சத் தத்துடன் விம்மலும் குமுறலும் தாளம் போடுவதுபோல் சேர்ந்து ஒலிக்கும் ஓசை கேட்டு உடல் நடுங்கிவிட்ட பாஸ் கரன் மெல்ல சத்தடி செய்யாமல் கதவைத் திறந்து "மன்னீ! யாருமில்லை. நான்தான் உங்கள் மகனுக் கொப்பான பாஸ்கரன்" என்று சொல்வதற்குள் பூமா தேவியின் பரிதாபகரமான கோர நிலையைக் கண்டு சகிக் காமல் தேம்பித் தேம்பி அழுகை வந்து தொண்டையை அடைத்துவிட்டது.

ஒரு சில வினாடிகள் அந்த இடத்தில் சமாதி நிலையை ஒத்த மவுனமும், பயங்கரமும் நிலவியது. மெல்ல பூமாவே சமாளித்துக்கொண்டு...."ஐயோ! இங்கு வரவேண்டாம்... பாஸ்கர்! நீங்கள் கீழே போய்விடுங்கள். நல்ல சுப காரி யம் நடக்கும்போது வீண் ரஸாபாஸமும், பிறர் எதிரில் அவமானமும் வேண்டாம். தயவுசெய்து போய்விடுங்கள்... என்று பேசமாட்டாது திக்கித் திணறிப் புலம்பிக் கொண்டே சொல்லியபடி எழுந்து தூரச் சென்று நின்றாள்.

கண்களைத் துடைத்துக்கொண்டே பாஸ்கரன் பூமா வின் முன்பு சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்துப் பின் "மன்னீ! உங்களைவிட இந்த நிமிஷம் நான் பாக்குவெட்டி யில் அகப்பட்டதுபோலிருக்கிறேன். உங்களைப் படுத்தும் பாடு போதாமல் பணக்கார வீட்டுப் பெண்ணை—அதிகம் உயர்தர படிப்புப் படித்தப் பெண்ணையும்—அம்மா சும்மா விடுவாள் என்று எனக்குத் தோன்றவில்லை, எனினும் நான் இப்போது கல்யாணத்திற்கு எதனால் ஒப்புக்கொள் கிறேன் தெரியுமா? எனக்கு வெகு தூரத்தில் வேலையாகி விட்டது. நான் என் மனைவிக்குத் துணையாக இங்கிருந்து முதலில் அம்மாவையும் அப்பாவையும் அழைத்துச் சென்று விட்டால் உங்களுக்கு விமோசனம் உண்டாகுமோ என் கிற ஆசையே அலைமோதுகிறது.

பாஸ்கரன் முடிக்கிவிட்ட மெஷின்போல் பேசுவதைக் கேட்கக் கேட்க பூமாவின் குடல் நடுங்குகிறது. திறந்த இதயத்துடன் பரிசுத்தமான நிலையில் பேசினாலும் மாமியா ருக்குத் தெரிந்துவிட்டால் என்ன விபரீதம் நேர்ந்து

விடுமோ என்ற பயமும் அதிர்ச்சியும் உண்டாகி வதைப்பதால் இவன் பேச்சு காதிலேயே விழவில்லை. கண்ணீர் பெருக, "பாஸ்கர்! உங்களை மன்றாடி கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தயவுசெய்து இறங்கிப் போய் விடுங்கள். உங்களுடைய தூய அன்பின் ஜோதியை என்னுள்ளம் அறியும். ஆனால் அறியாமை—பொறாமை மூதவிய அந்தகாரத்தில் மூழ்கிக் கிடக்கும் உங்கள் தாயாருக்கும் தமையனுருக்கும் தூயமான அன்பின் பிரகாசம் தெரியாது. தயவுசெய்து போய்விடுங்கள்" .... என்று கெஞ்சினாள்.

பாஸ்:—மன்னீ! அண்ணா கூடவா உன்னிடம் இன்னமும் வித்யாஸமாயிருக்கிறான். அவனுக்குமா இதயமில்லை.

பூமா:—ஐயோ! பாஸ்கர்! தயவுசெய்து போகமாட்டீர்களா? உங்கள் அம்மாவோ அண்ணாவோ வந்துவிடப் போகிறார்களே! என்னுயிர் நடுங்குகிறதே; உங்கள் அன்பு அனர்த்தமாகி விடாமலிருக்க வேண்டுமே! போய் விடுங்கள்! பாஸ்கர்! போய்விடுங்கள். நான் மகா பாவி. சண்டாள ஜென்மமெடுத்து இந்த கதியை அடைந்து பரிதவிக்கிறேன். நீங்கள் உண்மையில் என்மீது தாயின் அன்பு கொண்டிருப்பது சத்யமானால் தாயின் வேண்டுகோளுக்குப் பணிந்து உடனே போய்விடுங்கள்" என்று தவித்துத் துடித்துக் கூறுவதைக் கண்டு பாஸ்கரனுக்குப் பின்னும் மனம் உருகிவிட்டது.

"மன்னீ! சத்யமாக நீங்கள் என்னைப் பெற்ற தாய் தான் என்பதை நான் எந்தக் கோயிலிலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். அதிகமான வாத்ஸல்யத்தினால் இரண்டு வருடங்களுக்கு முன்பு நீங்கள் எனக்கு ப்ரத்யேகமாய்ப் பக்ஷணங்கள் செய்து அளித்ததையும், ஜுரத்துடன் நான் கிடக்கையில் நீங்கள் அருகில் வந்து தலையைப் பிடித்துவிட்டு மருந்து கொடுத்து செய்ததையும் விஷவ்ருக்ஷத்தின் வளர்ச்சிக்கான விதையாக அண்ணனே எண்ணி இத்தகைய கடுமையான நிலையில் உங்களை நடத்துவதை என்னால் கண்டு சகிக்க முடியவில்லை. அந்த எண்ண மேகம் இன்னுமா கலையவில்லை?.........மன்னீ! மன்னீ! எங்கே ஓடப்பார்க்கிறீர்கள்.......

என்பதற்குள் பூமா மொட்டை மாடிப் பக்கத்தில் இருந்த ஒரு இருட்டு சாமான் அறைப்பக்கம் ஓடத் தொடங்கினாள். அதே சமயம் கீழே புரோகிதர் வெள்ளிக்கிழமை முகூர்த்தத்தை முடித்துக்கொண்டு சனிக்கிழமை உஷஸ்

காலத்தில் ஊருக்குத் தம்பதி சகிதம் ப்ரயாணமாகி விமானத்தில் சென்றுவிடலாம் என்று கூறியதைக் கேட்டது தான் தாமதம் அதுவரையில் பாஸ்கரனைக் கவனிக்காதிருந்த அகிலாண்டம்மாள் ஊஞ்சப் பலகையில் ஒரு மூலை காலியாக இருப்பதைக் கண்டதும் வானம் இடிந்துத் தலைமேல் விழுந்தது போன்ற பேரதிர்ச்சியும், துடிப்புமடைந்து தடதடவென்று மாடிக்கு ஏறி யூகமாய் ஓசைசெய்யாமல் மெல்லச் சென்று ஒட்டுக் கேட்கத் தொடங்கினுள்.

பாஸ் :—மன்னி! கோபிக்காதே! இனிமேல் இந்த கடுஞ்சிறைவாஸ தண்டனையில் உன்னை வைத்துப் பார்க்க நான் சகிக்கமாட்டேன். என்னுடைய இதயமே என் தாயாரின் — தமயனுரின் — செய்கையால் பிளந்துவிடும் போலிருக்கிறது.

பூமா : ஐயோ! பாஸ்கர்! உங்களுடைய அன்பு வெள்ளத்தின் ப்ரவாகத்தை இப்பாவியின் உள்ளமரியும். இந்த சமயம் தயவுசெய்து எழுந்து போய்விடுங்கள்" என்று கெஞ்சிக் கண்ணீர் வழிய சொல்லும்போது....“அடிச் சண்டாளீ! பாதகி! குடியைக் கெடுக்கும் கோடாரிக்காம்பே....ஏண்டா! பாஸ்கரா! இதென்னடா அக்ரமம்! இதென்னடா அனியாயச் கொள்ளைபோன்ற நாடகம். இந்த மானங்கெட்ட வயிற்றெரிச்சல் பிழைப்பை, வந்திருப்பவர்கள் பார்த்துவிட்டால் என்னடா ஆகும் நம்கதி. ஐயயோ! குடி முழுகிப்போய் விட்டதே...கீழேவா! மானம் போகிறது” என்று தன்னுடைய பத்ரகாளி குரலையும் சற்று அடக்கிக்கொண்டு கண்களில் செந்தணல் பொறிபறக்க, தேகம் படபடக்க; உதடுகள் துடிதுடிக்க பாண்டியநாட்டை எரித்த கண்ணகிபோல் அகிலாண்டம்மாள் காக்ஷியளித்துதான் தாமதம். “ஐயோ!” என்ற அலறலுடன் பூமா தலைசுற்றிக் கீழே விழுந்துவிட்டாள்.

இதைக்கண்டு நடுநடுங்கிவிட்ட பாஸ்கரன் “அம்மா! இதென்ன அனியாயக் காரியம். விழுந்து கிடப்பவளைத் தூக்கிவிடம்மா!” என்று ஒரு கர்ஜனை செய்தான். இதற்குள் தாயைத் தொடர்ந்து சேஷகிரியும் மாடிக்குவந்து இந்த அலங்கோலங்களைக் கண்டு முதலில் தன் தம்பியின்மீது அடங்காத ஆத்திரம் உண்டாகியதோடு கண்ணுமண்ணு தெரியாத கோபம் மனைவியின்மீதுப் பொங்கி எழுந்ததால் அவள் விழுந்துகிடக்கும் நிலைமையின் பரிதாபத்தையும் மறந்து தடார், புடார் என்று அடித்தும் காலால் உதைத்து விட்டு “டேய்! பாஸ்கரா! இருக்கட்டும் உன்னிடம் பழிதீர்த்துக் கொள்ளும் சமயம் வரும்டா! வரும்....அம்மா! உனக்கு

புத்தியில்லையா வீட்டேரி வரத்தகாதவர்கள் வந்திருக்கையில் நீ இங்கு வந்து ரகளையை உண்டாக்கியது வெகு அழகு கீழே போம்மா!" என்று ஒருகர்ஜனையைசெய்து தாயாரின்



கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு அறைவாயிலை அடைவதற்குமுன் அவ்வறையின் கதவைத் தள்ளிக்கொண்டு ஸேதுராமனின் மனைவியும், அகல்யாவும் வந்துநிற்பதைக்

கண்டு அகிலாண்டம்மாளுக்கு சப்தநாடிகளும் அடங்கி மூச்சே நின்றுவிட்டது போன்ற அதிர்ச்சி உண்டாகி கதி கலங்கிவிட்டது.

வெகு பரபரப்புடன் அகல்யாவே பேசத் தொடங்கி.... "என்ன நடந்தது. என்ன சமாச்சாரம், ஏன் இவர்கள் இப்படி விழுந்துவிட்டார்கள்" என்று கூறியபடி தடதட வென்று சென்று அலங்கோலமாக விழுந்துகிடக்கும் பூமாவைத் தானே தூக்கி நேராகப் படுக்கவைத்ததோடு "மாமீ!கொஞ்சம்குளிர்ந்தஜலம்கொண்டுவாருங்கள்" என்று அகிலாண்டம்மாளுக்கே கட்டளை இட்டதோடு பாஸ்கரனை ஒருதினுசாகப் பார்த்தபடி "ஏன்ஸார்! ஆபத்தாக விழுந்து கிடப்பவர்களைத் தூக்கிவிடாமல் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே!(பஸ்டெய்டு)முதல் சிகிச்சை செய்ய வேண்டாமா!" என்று குயிலினும் இனிய குரலால் இசை பாடுவதுபோல் பாடியும் விட்டாள்.

ஏற்கனவே உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டிருப் பதால் மயக்கமாகி விழுந்துவிட்டதாக அகல்யாவும் அவள் தாயார் ஸீதம்மாளும் எண்ணினார்கள். அகிலாண்டம்மாள் எதுவுமே பதில் சொல்லாமல் தடுமாறித் திணறியவாறு சில விநாடிகள் நின்றுவிட்டாள். பிறகு தன்னைத்தான் தேற்றிக்கொண்டு...."எனக்கு ஒன்றுமே தோன்றாமல் கைகால்கள் நடுங்கிவிட்டது ஏதாவது கஞ்சியோ பாலோ! ஆகாரம் கொடுத்துவிட்டு வரலாம் என்றுதான் வந்தேன். அப் போதே இவளுக்கு மயக்கம் வந்து விழுந்து கிடந்தாள். கலாட்டா செய்தால் நீங்கள் எல்லோரும் பயப்படுவீர்களே என்றதால்மெல்ல இவர்களைமட்டும்கூப்பிட்டேன்..." என்று சம்மந்தா சம்பந்தமில்லாது உளறினாள்.

இதற்குள் ஸீதம்மாள் தானே ஓடிச்சென்று குளிர்ந்த ஜலத்துடன் வந்து பூமாவின் முகத்தில் தெளித்து வீசினாள். முதல் சிகிச்சையில் நன்றாகத் தேர்ச்சி பெற்றுள்ள அகல்யா தனக்குத் தெரிந்தவரையில் செய்து பூமாவை அணைத்தபடி உட்கார்ந்திருந்தாள்.

"ஏம்மாமீ! ஜுரம் காய்வதாகச் சொன்னீர்களே; ஜுரமே இல்லையே. சாதாரணமாகத்தானே உடம்பு இருக்கிறது. கையில் நாடி மிகத் தெளிவாயிருக்கிறதே" என்று கேட்டாள். பாவம்! இந்தக்கேள்விக்கு அகிலாண்டம் மாள் என்னபதில் சொல்லுவாள்? அசட்டுக்களைச் சொட்ட திருகத்திருக விழித்தபடியே நின்றாள்.

1837